25-3-1990

மஹா சித்தி கல்ப்ப ரசாயனமும்
ஆசிர்வாத தைலமும்

மூட்டுவாதம், வாத நோய்கள், உடல் மெலிவு, மாதவிடாய் தாமதம், இரத்தக் குறைவு ஆகிய நோய்களுக்கு சிறந்த நிவாரணி. 30 நாட்களுக்கான ரசாயனம ரூ 35/- தைலம் 2 அவுன்ஸ் போத்தல் ரூ 15/- தபால் செலவு 10/25.

Dr. W. K. Jinadasa
161, Olcot Mawatha,
Colombo — 11.

# தினபதி

3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6527 1990 மார்ச் 1 வியாழக்கிழமை ★ ★ ★ தினபதி

செய்தி இதழாக பதிவு பெற்றது

வஜீகரண ரசாயனமும்
தைலமும்

திருமண வாழ்க்கை சிறக்கவும், வாழ்க்கையின் பூரணத்துவத்தைப் பெறவும் அதிசிறந்தது. 30 நாட்களுக்கான ரசாயனம ரூ 35/- 2 அவுன்ஸ் தைலம் 15/- தபால் செலவு ரூ 10/25.

Dr. W. K. Jinadasa
161, Olcot Mawatha,
Colombo — 11.

★ தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை
★ தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படவில்லை
★ அடிப்படை பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை
★ நிரந்தர அரசியல் தீர்வு எதுவும் ஏற்படவில்லை

# இப்போது ஆயுதங்களை கையளிக்க மாட்டோம்

## சுட்டுக் கொலை

வவுனியா கெபித்திகொல்லாவ பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இனந் தெரியாத நபர்கள் ஜே வி பி இயக்க முன்னணி உறுப்பினரான எஸ் குமாரசிங்காவை சுட்டுக் கொன்றனர்.

# கிழக்கில் முஸ்லிம் மக்கள் நிம்மதியாக வாழ புலிகள் ஒத்துழைப்பு

## அமைச்சர் ஹமீதிடம் உறுதி

மட்டக்களப்பு, பெப்- 27

தமிழ், முஸ்லிம மக்களின் ஒற்றுமைக்கு வழிசெய்வது என்றும முஸ்லிம மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு எல்லா வழிகளிலும ஒத்துழைப்பு வழங்குவது என்றும அமைச்சர் ஏ வி எஸ் ஹமீதுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பில் உறுதி அளித்தனர்

வடக்கு, கிழக்கு பாதுகாப்புப் பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும இலங்கை அரசிற்கும இடையே நேற்று முன்தினம மட்டக்களப்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன-

அரசாங்கத்தின் சார்பில் உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் ஜனாப் ஏ வி எஸ் ஹமீது மட்டக்களப்பு சென்று புலிகளின் பிரதிநிதி

(2ஆம பக்கம பார்க்க)

# விடுதலைப் புலிகள் ஆலோசகர் பாலசிங்கம் மட்டக்களப்பில்

## பத்திரிகையாளர்களிடம் தகவல்

ஈ பி ஆர் எல் எப் 19 நிபந்தனைகளும் நடைமுறை சாத்தியமற்றவை என்று நிராகரிப்பு

— இரா துரைரத்தினம் —

மட்டக்களப்பு, பெப்ரவரி 28

தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவே ஆயுதங்களை ஏந்தியிருக்கிறோம். இப்போது நாம் ஆயுதங்களைக் கையளிக்கமாட்டோம். இப்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்டன் பாலசிங்கம் மட்டக்களப்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.


...விரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பவர்களும — ...கார சபைத் தேர்தல் ...ம் பொதுத் தேர்தல் ஆகிய ...ற்றை ...யொட்டி பாதுகாப்புக்


...தோடு ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தின் 19 நிபந்தனைகளையும புலிகள் நடைமுறை சாத்தியமற்றவை என்றும ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றும நிராகரித்து...

...கள் நிராகரித்தனர்-

ஆயுதக் கையளிப்புப் பற்றி திரு பாலசிங்கம் பத்திரிகையாளர்களிடம கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்-

# சென்னை ஆஸ்பத்திரியில் ஜெயலலிதா





அண்மையில் கார் விபத்தொன்றில் காயமடைந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவி செல்வி ஜெயலலிதா சென்னை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதை அடுத்து இ காங்கிரஸ் தலைவரும முன்னாள் இந்தியப் பிரதமருமான திரு ராஜீவ் காந்தி அவரைச் சென்று பார்வையிட்டார்- தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு தே ராமமூர்த்தி, அ இ அ தி மு கழகத் தலைவர் திரு எஸ் டி சோமசுந்தரம ஆகியோரும ஜெயலலிதாவை ராஜீவுடன் சென்று பார்வையிடுவதையும —

விரோதமாக ஆயுதங
வைத்திருப்பவர்களும —
..காண சபைத் தேர்தல்
..று பொதுத் தேர்தல் ஆகிய
..ற்ற ..யாட்டி பாதுகாப்புக்
..ாக அரசிடமிருந்து ஆயுதங
களைப் பெற்றவர்களும இன்று
மார்ச் முதலாம திகதிக்கு முன்
னர் ஆயுதங்களை ஒப்படைத்து
விட வேண்டும என்று அரசாங
கம் கடும எச்சரிக்கை விடுத்திருப்
..து தெரிந்ததே—

புலிகள் ஆயுதங்களை இப்
..து கையளிக்க மாட்டார்கள்
.. திரு பாலசிங்கம அறிவித்த

தோடு ஈ பி ஆர் எல் எப் இயக்
கத்தின் 19 நிபந்தனைகளையும
புலிகள் நடைமுறை சாத்தியமற்
றவை என்றும ஏற்றுக் கொள்ள
முடியாதவை என்றும நிராகரித்து
விட்டனர் எனவும தெரிவித்தார்—

வடக்கு கிழக்கு மாகாண
சபையைக் கலைத்து புதிதாகத்
தேர்தல் நடத்துவதற்கு ஈ பி ஆர்
எல் எப் இயக்கம் 19 நிபந்தனை
களை உள்ளடக்கிய அறிக்கை
ஒன்றை தமிழக முதல்வர் திரு மு
கருணாநிதியிடம சமர்ப்பித்
தது— அந்த அறிக்கையில்
இருந்த நிபந்தனைகளையே புலி
கள் நிராகரித்தனர்—

ஆயுதக் கையளிப்புப் பற்றி திரு
பாலசிங்கம் பத்திரிகையாளர்க
ளிடம கருத்துத் தெரிவிக்கையில்
பின்வருமாறு கூறினார்—

தமிழ் மக்களின் பாதுகாப்பு
உறுதிப்படுத்தப்படவில்லை—

தமிழ் மக்களின் அபிலாஷை
கள் பூர்த்தி செய்யப்படவில்லை—
தமிழ் மக்களின் அடிப்படைப்

(2ஆம பக்கம பார்க்க)



பார்வையிட்டார்— தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு தே
ராமமூர்த்தி, அ இ அ தி மு கழகத் தலைவர் திரு எஸ் டி
சோமசுந்தரம ஆகியோரும ஜெயலலிதாவை ராஜீவுடன்
சென்று பார்வையிடுவதையும —

ஜெயலலிதா பயணம செய்த காரின் முன்புறம அடி
பட்ட வேகத்தில் நொறுங்கிப் போயிருப்பதையும படங
களில் காணலாம—

[எ*ச]

# ஆயுத கையளிப்பு: அதனபின்தேர்தல்

## நடத்த 'ரெலோ சம்மதம்

கொழும்பு பெப் 28

ஆயுதம தாங்கிய சகல அர
சியல் அமைப்புகளும ஆயுதங
களை ஒப்படைத்த பின்னர்
நடைபெறக்கூடிய மாகாண
சபை தேர்தலையே எமது இயக்
கம ஏற்றுக் கொள்ள முடி
யும என தமிழக முதல்வர்
கருணாநிதியிடம ரெலோ
இயக்க பிரதிநிதிகள் தெரிவித்
துள்ளனர்—

தமிழக முதல்வர் திரு மு
கருணாநிதி தமிழ் அரசியல் இய
க்கங்களுடன் நடத்திக் கொண்
டிருக்கும பேச்சு வார்த்தைகளில்
கலந்து கொண்ட ரெலோ
இயக்க பிரதிநிதிகள் குழு
வடக்கு கிழக்கு மாகாண சபை
கலைக்கப்படுவது தொடர்பாக
திரு கருணாநிதி தெரிவித்த கருத்
துக்கு தனது ஆதரவை தெரிவித்
துள்ளது—

ரெலோ இயக்கம விடுத்துள்ள
பத்திரிகை அறிக்கையில் இவ்

(2ஆம பக்கம பார்க்க)

## கல்முனை, அதிபர்கள் கல்வி அமைச்சர் சந்திப்பு இன்று

கொழும்பு, பெப். 28

கல்முனை கல்வி மாவட்ட
கோத்தணி அதிபர்கள் தூதுக்
குழு ஒன்று இன்று கல்வி, கலா
சார, தகவல் துறை அமைச்சர்
திரு லொக்கு பண்டாரவைச்
சந்திக்கும.

கல்முனைக் கல்வி மாவட்டத்

(2ஆம பக்கம பார்க்க)

# தொலைபேசி கட்டணத்தை வங்கியில்செலுத்தும் நடைமுறையில்சிக்கல்

கொழும்பு, பெப் 28

தொலைபேசிக் கட்டணங
களை வங்கியில் செலுத்தும
புதிய நடைமுறையில் காணப்
படும குளறுபடி வாடிக்கையா
ளர்களை பெரும சிரமத்துக்
குள்ளாக்கி இருக்கிறது— இத
னால் தமது தொலைபேசிக்
கட்டணங்களை கிரமமாகச்
செலுத்தி வரும வாடிக்கை
யாளர்களும தொலைபேசி
இணைப்பு துண்டிப்புக்கு
ஆளாகக் கூடிய நிலை உரு
வெடுத்துள்ளது—

தொலைபேசிக் கட்டணங
களை இனிமேல் வங்கிக் கணக்
கில் செலுத்துமாறு வாடிக்கையா
ளர்களிடம கேட்டிருந்த தொலை
தொடர்பு திணைக்களம வாடிக்
கையாளர்கள் தமது காசோலை
களை தொலை தொடர்பு பணிப்
பாளரின் பெயரில் 267 ஆம இல
க்க கணக்கில் வைப்புச் செய்யு
மாறு அறிவுறுத்தியிருந்தது—
தமது காசோலைகளை இந்த

(2ஆம பக்கம பார்க்க)

## சோமண்ணை



காசு கொடுக்கிற விஷயம
என்றால் எல்லாம கஷ்டம தான்
பாருங்கோ.

# எயிட்ஸ் நோயுடன் கர்ப்பிணி

## கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டார்

கொழும்பு, பெப். 28

கொழும்பு நகரில் எயிட்ஸ்
நோயினால் பீடிக்கப்பட்ட
கர்ப்பிணிப் பெண் ஒருவர்
கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இவரது பிரசவத்துக்கென
தனியான பிரசவ அறை ஒன்றை
அமைக்க நடவடிக்கை எடுக்கப்
பட்டிருக்கிறது.

இந்தப் பெண் பல ஆண்க
ளுடன் உறவு கொண்டுள்ளார்
என்றும கண்டுபிடிக்கப்பட்டிருக்
கிறது. இவரது இரத்தத்தை பரி
சோதிப்பதற்கு டாக்டர்கள் ஏற்
பாடு செய்துள்ளனர்.

பிரசவத்துக்கென இந்தப்
பெண்ணால் பாவிக்கப்படும
புடைவைகளையும மற்றும உப

(2ஆம பக்கம பார்க்க)

ஜாஎலையில்

# வங்கி கொள்ளை முயற்சி முறியடிப்பு

கொழும்பு, பெப். 28

ஜா—எல இலங்கை வங்கி
யிலிருந்து கொண்டு செல்லப்
பட்ட ஒரு லட்சத்து 19 ஆயி
ரம ரூபா ரொக்கப் பணத்தை
6 இளைஞர்கள் கொள்ளை
யடிக்க முயன்றனர்.

(2ஆம பக்கம பார்க்க)

# சாரதி அனுமதி பத்திரம் பெறும் கால எல்லை நீடிப்பு

கொழும்பு, பெப். 28

மோட்டார் வாகன சாரதி
களுக்கு புதிய சாரதி அனுமதிப்
பத்திரங்களை பெறும இறு
தித் தினம மே மாதம
31ஆம திகதி வரை நீடிக்கப்
பட்டுள்ளது.

பெப்ரவரி 28ஆம திகதி வரை
மட்டுமே இதற்கான விண்ணப்
பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும
என ஏற்கனவே அறிவிக்கப்பட்டி
ருந்தது.

ஆனால் புதிய அறிவித்தலின்
படி மே மாதம 31ஆம திகதி
வரை சாரதி அனுமதிப் பத்தி
ரங்களை பெற்றுக் கொள்ளலாம.

(ந—வ)

## செல்லசாமி இன்று களுத்துறை பகுதிக்கு விஜயம்

கொழும்பு, பெப். 28

போக்குவரத்து ராஜாங்க
அமைச்சர் திரு எம எஸ்
செல்லச்சாமி இன்று பாணந்
துறை, களுத்துறை பகுதி
களுக்கு உத்தியோகபூர்வ
விஜயம ஒன்றை மேற்கொள்
கிறார்.

பாணந்துறைக்கு விஜயம்
செய்யும ராஜாங்க அமைச்சர்,
அங்கு பஸ் நிலையத்திலும, டிப்
போவிலும நிலவும குறைநிறை

(2ஆம பக்கம பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# வெளிநாட்டு நிதி உதவிகளை பன்முகப்படுத்தத் திட்டம்

## இதற்கான கலந்துரையாடல் 20இல்

கொழும்பு பெப் 28

வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிதி உதவிகளை பன்முகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி ஒபரோய் ஹோட்டலில் நடைபெற உள்ளது.

இக்கலந்துரையாடலை வர்த்தக திணைக்களம் நடத்த உள்ளது. இக்கலந்துரையாடல் ஐக்கிய நாட்டு அபிவிருத்தி திட்டத்தின் ஆதரவுடன் நடத்தப்படும்.

அபிவிருத்தி அடையாத ஆசிய நாடுகளுக்கும் கோலாலம்பூர் போன்ற நாடுகளுக்கும் இந்நிதி உதவி பன்முகப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் ஏற்றுமதியாளர்களும் உற்பத்தியாளர்களும் முக்கிய பிரச்சினைகள் பலவற்றை தீர்த்துக் கொள்ளலாம்.

இவர்களின் அபிவிருத்திக்காகவே இக்கலந்துரையாடல் செயல்படுத்தப்பட உள்ளது.

ஐக்கிய நாட்டு அபிவிருத்தி திட்டத்தில் உள்ள பல நிபுணர்கள் இக்கலந்துரையாடலில் கலந்துக் கொள்வார்கள்.

ஜப்பான் — கனடா — ஐக்கிய நாடுகள் — அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் உள்ள நிபுணர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துக் கொள்வார்கள்.

ஏற்றுமதியாளர்களும் — உற்பத்தியாளர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு நிபுணர்களிடம் இருந்து நேரடியான ஆலோசனைகளை பெறலாம்.

வர்த்தக துறையில் ஈடுபட்டு உள்ள அதிபர்களுக்கும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக மான விவரங்களை வர்த்தக திணைக்களத்துடன் தொடர்புக் கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (இ—455)

## ஆயுத கையளி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஏனைய அரசியல் இயக்கங்களின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் படுகொலை செய்வதையும் கைது செய்து துன்புறுத்துவதையும் புலிகள் இயக்கம் நிறுத்தவது எனவும் ஏனைய அரசியல் இயக்கங்களின் சட்டபூர்வமான ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளுக்கு புலிகள் இயக்கத்தினால் இனிமேல் எந்தவித தடையும் இருக்க மாட்டாது எனவும் இரண்டு வாக்குறுதிகளை தமிழக முதலமைச்சர் புலிகள் இயக்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் எமது இயக்கப் பிரதிநிதிகள் திரு கருணாநிதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாகாண சபை கலைப்பை பொறுத்த மட்டில் கடந்த வருடம் வைகாசி மாதத்திலேயே சகல தமிழ் அரசியல் அமைப்புகளும் கலந்து கொள்ளக்கூடியதாக இப்போது உள்ள மாகாண சபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டுமென எமது இயக்கம் கருத்து தெரிவித்திருந்தது.

இந்த நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லையென்று திரு கருணாநிதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயுதங்களின் மத்தியில் நடைபெறக்கூடிய எந்த தேர்தலும் சுதந்திரமானதாகவோ நீதியானதாகவோ அமைக்க முடியாது.

மக்கள் பயமின்றி சுதந்திரமாக வாக்களித்து உண்மையான மக்கள் அரசாங்கம் ஒன்றினை மாகாண மட்டத்தில் அமைத்துக் கொள்வதற்கு ஆயுதங்கள் அனைத்தும் கையளிக்கப்பட வேண்டும் என்றும் எமது சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## தொலைபேசி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் எழுதிக் கொண்டு நுகேகொடை வங்கியொன்றுக்குச் சென்றிருந்த வாடிக்கையாளர்கள் வங்கி அதிகாரிகளினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

காசோலைகள் வேறு ஒரு இலக்க கணக்கின் பெயரில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கூறிய வங்கி அதிகாரிகள் வாடிக்கையாளர்களின் காசோலைகளை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

சில வாடிக்கையாளர்கள் காசோலைகளுக்குப் பதில் பணம் செலுத்த முன் வந்த போது அவற்றை ஏற்றுக் கொள்ளவும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

பதிலாக காசுக் கட்டளைகளைக் கொண்டு வரும்படி வாடிக்கையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். சிலர் திரும்பிச் சென்று புதிய காசோலைகளுடன் வந்த போதும் வங்கி மூடப்பட்டிருந்ததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

நுகேகொடை பிராந்திய தொலை தொடர்பு காரியாலயத்தில் விசாரித்த போது கட்டணங்களை தாம் ஏற்றுக் கொள்வதில்லை என்று அங்கு தெரிவிக்கப்பட்டது. [ந—032]

## இப்போது ஆயுதங்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.

நிரந்தர அரசியல் தீர்வு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் நாம் எப்படி ஆயுதங்களைக் கையளிப்பது. இப்போது கையளிக்க மாட்டோம்.

இப்படி அவர் கூறினார்.

எமது பிரச்சினைகளுக்கு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்போம். இதற்கு இந்தியாவின் அரசியல் தலையீடோ இராணுவ தலையீடோ தேவையில்லை.

...ப்பட்ட பிரதிநிதிகளாக இருந்து அவர்களுக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளிப்பதோடு அவர்களின் நல்வாழ்வுக்கு உதவுவதும்தான்.

ஜனநாயக பாதையைத் தழுவி விடுதலைப் புலிகள் இயக்கம் மக்கள் செல்வாக்கைப் பெற்ற அமைப்பு என சர்வதேச ரீதியில் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

13 வருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கில் ஜனநாயகத் தேர்தல் நடத்தப்படவில்லை.

ஆகவே ஜனநாயக உரிமை...

எதிரான 6 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கும்படி அரசைக் கோருகிறீர்கள். அதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்தால் என்ன செய்வீர்கள்? 6 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய சத்தியப்பிரமாணம் செய்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவீர்களா?

பதில்— 6 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டியது அரசின் பொறுப்பு. அதனை நீக்கிய பின்பு தேர்தலில் நிற்போம். இதில் நாம...

## இன்றைய திரைகளில்

5 வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) 2-30, 6-00, 9-30

றியோ (யாழ்நகர்) 10-30, 2-00, 6-00

கிறனாடா (பேருவளை) 10-30, 2-30, 6-00

பிரபு - அமலா

சிறுவன் மீனுராஜ் நடித்த

**பூ...**

**பூவா**

**பூத்திருக்கு**

(கலர்)

10 வது கடைசி வாரம

## திறப்புவிழா இன்று

அக்குறணை, பெப்— 27

அக்குறணை நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர பள்ளிவாசல் வருமானத்திற்கான "அஸ்னா சுப்பர் மார்க்கட்" என அழைக்கப்படும் கடைத் தொகுதிகள் யாவும் இன்று முதலாம் திகதி திறந்து வைக்கப்பட உள்ளன. (இ—411)

## செல்லச்சாமி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களை கேட்டறிவார். அத்தோடு புதிய பஸ் சேவை ஒன்றையும் ஆரம்பித்து வைப்பார்.

களுத்துறையில் பஸ் டிப்போவிலும் ரயில் நிலையத்திலும் நிலவும் குறைநிறைகளை கண்டறியும் திரு செல்லச்சாமி, பஸ், ரயில் ஊழியர்களையும், தோட்டத் தொழிலாளர்களையும் சந்திப்பார்.

இந்த விஜயத்தின் போது ராஜாங்க அமைச்சரோடு அவ்வப் பகுதி மாகாண சபை உறுப்பினர்களும், அதிகாரிகளும் கலந்து கொள்வர். (ந—ங)

## எயிட்ஸ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரணங்களையும் பிரசவத்தின் பின்னர் முற்றாக அழித்து விடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவரது பிரசவ நடவடிக்கைகளில் ஈடுபடும் தாதிமாருக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் விசேஷ அறிவுரைகள் வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த பெண்ணால் பிரசவிக்கப்படும் குழந்தைகளுக்கு எயிட்ஸ் நோய்க்கான சாத்தியக் கூறுகள் 50 சத வீதம் இருக்கலாம் என டாக்டர்கள் நம்புகின்றனர்.

இதேவேளை கொழும்பு நகரில் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்ட மற்றுமொரு பெண்ணும் இருக்கலாம் என்று டாக்டர்கள் தெரிவிக்கின்றனர். (ந—வ)

## கல்முனை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் 1488 தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் பற்றாக் குறையாக உள்ளனர்.

தற்போது பயிற்சி ஆசிரியர்களாக இருப்பவர்களைக் கொண்டு இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு அமைச்சரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுக்...

## வங்கி கொள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜா—எல பொலீஸார் இந்த கொள்ளை முயற்சியை முறியடித்தனர்.

ஏக்கலையிலுள்ள ஜோன் கீல்ஸ் நிறுவன ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவதற்கென நேற்று முன்தினம் (27 ஆம் திகதி) முற்பகல் 11 மணியளவில் நிறுவன அதிகாரிகள் வாகனம் ஒன்றில் இந்த பணத்தை எடுத்துச் சென்றனர்.

அவ்வேளை அதே வழியாக சைக்கிள்களில் வந்த ஆறு இளைஞர்கள் பாதையில் குறுக்கிட்டு வாகனத்தை நிறுத்தினர். பின் ஆயுதங்களை காட்டி பயமுறுத்தி பணத்தை கொள்ளையடித்தனர்.

இச்சம்பவத்தை கண்ணுற்ற இப்பகுதி வாசிகள் ஜா—எல பொலீஸாருக்கு இதுபற்றி தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தனர்.

ஜா—எல பொலீஸார் உடனடியாக செயல்பட்டனர். சம்பவம் நடந்த இடத்திலேயே கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் ஒரு தொகையை மீட்டனர். சந்தேக நபர்கள் இருவரை மடக்கிப் பிடித்தனர்.

அதன் பின்னர் சந்தேக நபர்களின் வாக்கு மூலங்களை அடுத்து மேலும் மூவரை பொலீஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடையே முன்னாள் தபால் அதிபர் ஒருவரும் காணப்படுவதாக தெரிய வருகிறது.

சந்தேக நபர்கள் ஜா—எல, கந்தானை, காலி, மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலீஸார் தெரிவித்தனர். (ந—வ)


## தினபதி சிறு விளம்பரம்

### அச்சக ஊழியர்

தமிழ் கொம்பவிட்டர்கள் அவசரமாகத் தேவை. ஐ பீ வீ அச்சகம், 320, டெமட்டகொடை ரோட், கொழும்பு-9.

வி இ 032179

25-02-90 ஆம் திகதியன்று ரூபவாஹினியில் ஒளிபரப்பான செவன டிக்கெட் மாபெரும் சீட்டிழுப்பின் பெறுபேறுகள்—

| | | |
|---|---|---|
| 1 | 01001797 | — 129 |
| 2 | 01001000 | — 103 |
| 3 | 01001998 | — 128 |
| 4 | 01001384 | — 323 |
| 5 | 01000208 | — 117 |

ஒரு லட்சம் ரூபா வீதம் ஐந்து லட்சாதிபதிகள்

உங்கள் வெற்றிக்குரிய டிக்கெட்டினை 541, ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள செவன செயலகத்தில் சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்—

வருடம் Year 2000 Shelter For All

திகன

நியூ டவுனில் — சைவ ஹோட்டல்

— இன்று —

1—3—90 காலை 8.00 மணிக்கு

மங்களத் திறப்பு விழா

சைவ உணவுப் பிரியர்களுக்கு மிகச் சிறந்த இடம

* நெய்த் தோசை * மசாலா வடை * பூரி
* மைசூர்ப்பாகு * லட்டு * கேசரி * ஜிலேபி

10 வது கடைசி வாரம
இங்லிஸ்
(கொழும்பு)
2-30, 6-00, 9-30
இன்ற மட்டும
ஹரன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
கமல்ஹாசன் — சரண்யா
ஜனகராஜ்
நடித்த
**நாயகன்**
(கலர்)

75 வது நாள்!]
ராஜா
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
ஈரோஸ்
(வாமன்கடை)
2-30, 6-00, 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா - நதியா
நடித்த
**ராஜாதி ராஜா**
(கலர்)

80 வது நாள்!
வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
நில்மினி
(வத்தளை)
10-30, 2-30, 6-00
கார்த்திக் — குஷ்பு
வி கே ராமசாமி
நடித்த
**சீருஷம் 16**
(கலர்)

...போம- இதற்கு ... அரசியல் தலையீடோ இராணுவ தலையீடோ தேவையில்லை- அதை நாம் அனுமதிக்கப் போவதும இல்லை என்றும ஒரு கட்டத்தில் திரு அன்டன் பாலசிங்கம் குறிப்பிட்டார்-

பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கும அவர் பதில் அளித்தார்-

கேள்வி- வடக்குகிழக்கு மாகாண சபையை அதிகாரம இல்லாத சபை என முன்னர் குறிப்பிட்டிருந்தீர்கள்- இந்த மாகாண சபையை இப்போது நீங்கள் ஏற்றுக் கொண்டது ஏன்?

பதில்- தேர்தல் நடந்த பின் அதிகாரம தொடர்பாகப் பேசுவோம- மக்கள் பிரதிநிதிகளாக நின்றே அதிகாரத்தைத் தருமபடி கேட்போம-

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் போது விடுதலைப் புலிகளுக்கும இராணுவத்திற்கும இடையிலான மோதலைத் தடுக்க சில வழிமுறைகள் பற்றி யோசனைகள் கூறி இருக்கிறோம-

கேள்வி- ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தினர் மாகாண சபையைக் கலைக்க வேண்டாம என்கின்றனர். புலிகளுக்கு மாகாண சபையில் வேண்டியளவு ஆசனங்களை விட்டுத் தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்- அது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்- ஈ பி ஆர் எல் எப்பிடமிருந்து ஆசனங்களைப் பெறுவதற்காக நாம விடுதலைப் போராட்டம நடத்தவில்லை. 17 வருடங்களாக ஆயுதப் போராட்டம நடத்தியது ஈ பி ஆர் எல் எப் தரும ஆசனங்களை பெற்றுக் கொள்வதற்காக அல்ல-

நாம தேர்தலில் பங்கு கொள்வதன் முக்கிய நோக்கம ஜனநாயக அரசியலில் பங்கு பற்றி மக்களால் தெரிவு செய்... தேர்தல் நடத்தப்படவில்லை-

ஆகவே ஜனநாயக உரிமையைப் பாவித்த பிரதிநிதிகளை தெரிவு செய்யும வாய்ப்பை மக்களுக்கு அளிக்க வேண்டும என்றும விருமபுகிறோம-

இந்திய அரசோ, தமிழ் நாட்டு அரசோ, இலங்கை அரசோ எங்கள் மக்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்க முடியாது-

தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்மாணிக்க வேண்டும-

இதற்கான சூழ்நிலையை ஆக்கிக் கொடுப்பதே தமிழ் நாட்டினதும இந்தியாவினதும தார்மீகக் கடமையாகும-

கேள்வி- நாட்டுப் பிரிவினைக்கு ... அதனை நீக்கிய பின்பு தேர்தலில் நிற்போம- இதில் நாம தெளிவாக இருக்கிறோம-

கேள்வி- நாடாளுமன்றத் தேர்தலிலும போட்டியிடுவீர்களா?

பதில்- நாடாளுமன்றத்துக்கு பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும என்ற நாட்டம எமக்கு இல்லை- கடந்த சுமார் 40 ஆண்டுகளாக நாடாளுமன்றம சென்றவர்கள் சாதித்தது என்ன? வடக்கு கிழக்கில் அரசாங்க நிர்வாகம தமிழ் பேசும மக்கள் பொறுப்பில் இருக்க வேண்டும- அதனால் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட இருக்கிறோம-

[உ—கு—ங]

# கிழக்கில்...

(1ஆம பக்கத் தொடர்ச்சி)

களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்-

மார்ச் மாதம் இறுதிப் பகுதியில் இந்தியப் படையினர் வெளியேறிய பின் இலங்கை இராணுவம மீண்டும் தமிழ் பிரதேசங்களில் அத்துமீறல்களில் ஈடுபடக் கூடாது-

இது தொடர்பான அச்சங்களை நீக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும-

இவ்வாறு விடுதலைப் புலிகள். மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தயா; அமைச்சர் ஹமீதிடம கேட்டுக் கொண்டார்-

விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் பொறுப்பாளர்கள், மாவட்ட பிரச்சினைகள் குறித்தும, திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் குறித்தும விளக்கினார்கள்-

வடக்கு, கிழக்கில் சமாதானம சகஜநிலை உருவாக விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்க ஆலோசனைகளை ஜனாதிபதியிடம சமர்ப்பிப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்-

கிழக்கு மாகாண முஸ்லிமகள் பற்றி நீண்ட நேரம விவாதிக்கப் பட்டது-

தமிழ், முஸ்லிம மக்களின் ஒற்றுமையும, முஸ்லிம மக்கள் நிமமதியுடன் வாழ சகல வழிகளிலும ஒத்துழைப்பு வழங்குவதெனவும புலிகளால் உறுதியளிக்கப்பட்டது-

பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தயா, அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், திருமதி பாலசிங்கம, செயலாளர் யோகி, அம்பாறை மட்டக்களப்பு அரசியல்பொறுப்பாளர் கரிகாலன், கிழக்குப் பிராந்திய இராணுவத் தளபதி கருணா, யாழ் அரசியல் பொறுப்பாளர் டொமினிக் வன்னி பொறுப்பாளர் சந்திரன், திருமலை ரூபன், தம்பலகாமம ரவி, மூசார் அரசன், சாள்ஸ், முன்னார் பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்-

(ந-கு-து)

... நிரப்புமாறு அமைச்சரிடம வேண்டுகோள் ஒன்றை விடுக்கவே, இவர்கள் அமைச்சரை இன்று சந்திக்கிறார்கள்.

இது சமபந்தமான ஆலோசனைக் கூட்டம கல்முனைக் கல்வி மாவட்ட பிரதம கல்வி அதிகாரி எம பி எச் முஹமட் தலைமையில் நேற்று கல்முனையில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் 21 கொத்தணி அதிபர்கள் கலந்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். (உ-கு-281)

* நெய்த் தோசை * மசாலா வடை * பூரி
* மைசூர்ப்பாகு * லட்டு * கேசரி * ஜிலேபி
* மற்றும இன்சுவைப் பலகாரங்கள்
வைபவங்களுக்கு ஆடர்கள் ஏற்கப்படும
அனைவரையும அன்புடன் அழைக்கின்றோம
**தாஜ் லங்கா கபே**
114- நியூடவுன்-
ரஜவெல- திகன
கிளை- தாஜ் லங்கா கபே கட்டுகஸ்தோட்டை

**1990ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி முதல்**
இன்று வரை முப்பத்திரண்டு லட்சத்து முப்பத்தையாயிரம ரூபா
**(32,35,000/— ரூபா)**

நாட்டு மக்களுக்கு "புதிய செவன" டிக்கெட்டுகள் வழங்கிய அதிஷ்டலாபப் பணம இதோ-

★50,000/- ரூபா வீதம அதிஷ்டசாலிகள் — 19 பேர்
வழங்கிய தொகை — 9,50,000/- ரூபா

★ 5000/- ரூபா வீதம செவன ஆங்கிலஎழுத்துக்கள்
பொருந்திய அதிஷ்டசாலிகள் — 214 பேர்
வழங்கிய தொகை — 10,70,000/- ரூபா

★ 1000/- ரூபா வீதம அதிஷ்டசாலிகள் — 1215 பேர்
வழங்கிய தொகை — 12,15,000/- ரூபா

மேலும இரண்டு சீட்டிழுப்பு வாய்ப்புகளை இரு வாரங்களுக்கு ஒரு முறை ஞாயிறு இரவு 9-00 மணிக்கு தேசிய ரூபவாஹினி உங்கள் முன் கொண்டு வரும-

ஒரு லட்சம ரூபா வீதம அதிஷ்டசாலிகள் — ஐந்து பேர்
செவிசமத ரூபவாஹினி போட்டியில் — இரண்டு லட்சம ரூபா

இவை யாவும உங்களுக்கே! — நாட்டு மக்களுக்கே!
வெற்றி பெற்றாலும பெறாவிட்டாலும — வெற்றி உங்களுக்கே! !

வருடம் Year **2000**
Shelter For All

# உழைப்பினால் உயர்ந்த இயக்குநர் தீனதயாளன்

அடிப்படை பயிற்சி, உழைக்கும் சக்தி, தகுந்த தகுதி, திறமை இல்லாத பலர் யார் யாரையோ சுரண்டிப் பிடித்து இயக்குநர்களாக (டைரக்டர்களாக) தமிழ்ப் பட உலகில் புகுந்து வருகிறார்கள்—இப்படிப் புகுபவர் ஒரு சிலர் கூட உருப்படியாகத் தேறுவது இல்லையாது— அவர்கள் இயக்கும் புதுப்படமும் திரைக்கு வருவதில்லை— பூஜையுடன் அவர்கள் ஆசையும் நிராசையாகி விடும்!

இந்த நிலையில் 13 ஆண்டுகள் துணை, அசோசியேட் டைரக்டராகப் பணி புரிந்த ஒருவர் வந்திருக்கிறார் என்றால் அது வரவேற்கத்தக்கது!

இவர் தமிழ் கற்றவர்— கதை, பாடல் எழுதும் வல்லமை பெற்றவர்— இவைகளுடன் கடும் உழைப்பாளி— முயற்சியால் தளராதவர், பழகுவதற்கு இனியவர்!

அவர்தான் தீனதயாளன்! பிரபல டைரக்டர் ஏ சி திருலோகசந்தரிடம் 5 ஆண்டுகள் இருந்து அவர் இயக்கிய படங்களில் பணி புரிந்தவர் தீனதயாளன்—

ராமராஜன் நடித்து சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கும் "மனசுக்கேத்த மகராசா" படத்தை டைரக்ட் செய்துள்ள தீனதயாளன் இப்போது பி எஸ் வீரப்பா தயாரிக்கும் ராமராஜன் நடிக்கும் "மண்ணுக்கேத்த மைந்தன்" என்ற படத்தை டைரக்ட் செய்து கொண்டிருக்கிறார்!

ராமராஜனின் நல்ல நண்பரான தீனதயாளன் "மண்ணுக்கேத்த மைந்தன்" படப்பிடிப்பு பற்றி தனது துணை இயக்குனர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அவரைப் பேட்டி கண்டார் எமது நிருபர்—

அப்போது அவர் கூறியதாவது—

"மண்ணுக்கேத்த மைந்தன்" படத்தின் காட்சிகள் அமைப்பு பற்றி மட்டும் பல மாதங்கள் ஆராய்ந்த பின்பே முழுக் கதையும் வடிவம் பெற்றுள்ளது.

ஏனென்றால் இது எனது அருமை நண்பர் ராமராஜன் நடிக்கும் படம்— அவர் நடிக்கும் படம் என்றால் தமிழ் மண்ணின் பெருமையை சிறிதளவு கூட விட்டுக் கொடுக்காத வகையில் வசனம் உட்பட காட்சிகளும் இடம் பெற வேண்டும்!

அதற்காகப் பல நாட்கள் இரவும் பகலும் ஆலோசித்து நிறைவு செய்து இருக்கிறோம்!

சினிமாவில் வெற்றி காண்பது சுலபம் அல்ல! கடும் உழைப்பு முதல்ல் முக்கியம் என்பதை



தீனதயாளன்

பப் பாங்கான படங்களையும் பொழுது போக்குப் படங்களையும் இயக்கி வெற்றி கண்டவர்கள்—

எனது ஆசான்களின் வழியில் நானும் புலதரப்பட்ட படங்களையும் இயக்கி வெற்றி காண வேண்டும்!

எனக்கு முதல் முறையாக "மேளம் கொட்டு தாலி கட்டு" படம் மூலம் இயக்கும் வாய்ப்பு வழங்கிய சிவராமதாஸ், ராகவன்தம்பி ஆகியோரை நன்றியுடன் நோக்குகிறேன்!

"மனசுக்கேத்த மகராசா" படத்தை எனது எண்ணம் போல் இயக்க அனுமதி அளித்து அன்பு காட்டிய தயாரிப்பாளர்களுக்கு நன்றி!

"குடியிருந்த கோயில் படத்தில் "நான் யார் நான் யார் நீ யார்" என்ற பாடலை நான் என்று கேட்டேனோ அன்று முதல் நான் புலவர் புலமைபித்தனின் ரசிகர்களில் ஒருவன் ஆனேன்! எனது திரையுலக ஆசைக்குத் தூண்டுகோலாக இருந்தவர் அவர்!

என்னை திருலோகசந்தரிடம் துணை டைரக்டர்களாகச் சேர்த்து விட்டவர் எங்கள் குடும்ப வக்கீல்!

இப்படி பலர் எனது கலை உலக வாழ்க்கைக்கு உந்து கோலாக நின்றதால் இன்றும் டைரக்டராக வந்திருக்கிறேன்— அவர்கள் அனைவருக்கும் நன்றி!"

இவ்வாறு கூறினார் சென்னையில் பிறந்து, வளர்ந்து, படித்த

தீபாவளி [ந—10]



இப்படி மெல்ல தழுவினால்தான் பல்லவியின் மெல்லிடை நோகாது என்பதைப் புரிந்து நடந்து கொள்ளும் முரளி!
[படம்— "நல்வாழ்த்துக்கள்"] [ந—10]

## பாடல் பதிவுடன்

### 'பாடவா உன் பாடலை' ஆரம்பம்

யுனைடெட் பிரண்ட்ஸ் வழங்கும் "பாடவா உன் பாடலை" ... நிழல்கள் ரவி – சபீதா ஆனந்த் ஜோடியுடன் செந்தில் ...

சர்வதேச தபால் சங்கம் மற்றும் ஐ.நா. அபி. திட்ட உதவியுடன்

# தபால்சேவை அபிவிருத்தி

## பயிற்சி கல்லூரி

## இலங்கையில் நிறுவப்படும்

கொழும்பு, பெப் 28

இலங்கையில் சர்வதேச தபால் சங்கத்தின் உதவியுடனும், ஐக்கிய நாட்டின் அபிவிருத்தி திட்டத்தின் ஆதரவிலும், தபால் பயிற்சிக் கல்லூரி அண்மையில் நிறுவப்பட உள்ளது.

தபால் சேவைகளை திட்டமிடல் நிர்வாகம் மற்றும் செயற்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவை இப்பயிற்சிக் கல்லூரி நிறுவப்படுவதன் நோக்கமாகும்.

தொலைபேசி திணைக்களத்தின் அதிகாரி இத்தகவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது—

174 வருடங்களுக்கு முன்னர் தபால் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரையிலும் தபால் துறையை அபிவிருத்தி செய்ய எவ்விதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. முதன் முறையாக தபால் சேவையின் பயிற்சிக் கல்லூரி இலங்கையில் நிறுவப்படவுள்ளது.

தபால் சேவையில் கடமையாற்றும் ஊழியர்கள், தங்களது சொந்த முயற்சிகளினால் பதவி ஏற்றம் பெற்றுள்ளார்கள். அவர்களுக்கென்று பயிற்சிகள் கொடுக்கப்படவில்லை.

இக்கல்லூரியை நிறுவுவதற்கு 1 கோடியே 34 லட்சம் ரூபா செலவிடப்பட உள்ளது. ஆறு வருட காலப் பகுதியில் இந்நிதி உதவி அளிக்கப்படும்.

வருடமொன்றிற்கு 200 பேர் பயிற்சி பெற்று வெளியேறுவர்.

இத்திட்டத்தை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமும் சர்வதேச தபால் சேவை சங்கமும் ஒழுங்கு செய்துள்ளது.

இத்திட்டம் 1987ஆம் ஆண்டு நடுப்பகுதியில் திட்டமிடப்பட்டிருந்தது.

வெள்ளவத்தை, கண்டி, காலி, பொல்காவலை ஆகிய பகுதிகளில் இருந்து வரும் பயிற்சி நிலையங்களின் தரம் உயர்த்தப்படும்.

இப்பயிற்சி நிலையங்கள் முழு நேர பயிற்சி நிலையங்களாக செயல்பட உள்ளன.

சர்வதேச தபால் சங்கத்தினதும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினதும் ஆலோசகரான திரு கொல்வின் எஸ்கிலாக் இலங்கையில் இப்பொழுது தங்கியுள்ளார்.

இவர் இத்திட்டத்தை செயல்படுத்த ஆலோசனைகளை அளிப்பார்.

(ந—455)

## தமிழ் அகதிகளின்

### உதவித்தொகை அதிகரிக்கும்

சென்னை பெப் 28

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான மாதாந்த உதவித் தொகையை அதிகரிப்பது என இந்திய அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறது. தமிழக அரசின் சிபார்சுகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

இதனை தமிழ்நாடு சமூகநலத் துறை இயக்குநர் திருமதி கரியாலி தெரிவித்தார்—

இப்பொழுது தமிழ் நாட்டில் 3000 இலங்கையர்கள் அகதிகளாக இருக்கின்றனர். வயது வந்தவர்களுக்கு பிரதி மாதமும் 110 ரூபாவும் சிறார்களுக்கு 75 ரூபாவும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

இத் தொகையை 150 ரூபாவாகவும் 100 ரூபாவாகவும் அதிகரிக்க வேண்டும் என தமிழக அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறது.

இதனை மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று அவர் சொன்னார்.

இப்பொழுது மண்டபத்திலும் மதுரையிலும் அமைக்கப்பட்டுள்ள இரண்டு முகாம்களில் இவர்கள் வைக்கப்பட்டுள்ளனர். இவ்விரு முகாம்களுக்கும் மின்சார வசதிகளையும் குடி தண்ணீர் வசதியையும் செய்து கொடுக்க ஏழு லட்ச ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ் அகதிகளின் வருகை அதிகரித்தால் இன்னும் ஒரு அகதி முகாமை அமைப்பது என தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இச் செய்தியை அகில இந்திய வானொலி ஒலிபரப்பியது—

(ண—ய)

கண்டி மாவட்டத்தில்

## மாணவர்களுக்கு நன்னீர் மீன் வளர்ப்பில் பயிற்சி

அக்குறணை, பெப் 27

கண்டி மாவட்டத்தில் பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்களுக்கு சுய தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்குமுகமாக நன்னீர் மீன் வளர்ப்பில் பயிற்சிகளை அளிக்க மத்திய மாகாண சபை முன்வந்துள்ளது.

இத்திட்டத்திற்கு இளைஞர் விவகார அமைச்சு, மத்திய மாகாண நீர்ப்பாசன அமைச்சு மனித வளத்துறை அமைச்சு, கடற்றொழில் அமைச்சு என்பவற்றின் உதவி பெற்றுக் கொள்ளப்பட உள்ளது.

ஆறு மாதம் இப்பயிற்சிகளை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்வோருக்கு சுய தொழிலாக நன்னீர் மீன் வளர்ப்பை மேற்கொள்வதற்கு மீன் குஞ்சுகள் உட்பட மற்றும் ஆலோசனைகள், சந்தைப்படுத்தல் உதவி ஆகியவை பெற்றுக் கொடுக்கப்படும்.

வங்கிக் கடனுதவியும் பெற்றுக் கொடுக்கப்பட உள்ளதுடன் பயிற்சிக் காலத்தின் போது கைச் செலவுக்கான பண உதவியும் வழங்கப்பட உள்ளது.

(ந—411)

பொலன்னறுவை மாவட்டத்தில்

## நெல் வயல்களை தாக்கும் வண்டினம் ஒழிப்பு நடவடிக்கை

### உடன் மேற்கொள்ளுமாறு உத்தரவு

கொழும்பு, பெப் 28

பொலன்னறுவை மாவட்டத்தில் நெல் வயல்களைத் ...

ஒழிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு நீர்ப்பாசன ராஜாங்க அமைச்சர் திரு ...

அமைச்சுக்கு உத்தரவு இட்டிருக்கிறார்.

செய்து இருக்கிறாம!

சினிமாவில் வெற்றி காண்பது சுலபம அல்ல! கடும உழைப்பு முதல் முக்கியம எனபதை எனக்குக் கற்றுத் தந்தவர்கள் எனது திரையுலக ஆசான்களான திருலோகசந்தரும ஏ ஜகந்நாதன் ஆகியோரே!

இன்று கார்த்திக் தவிர எல்லா புகழ் பெற்ற நடிகர்கள் நடித்த படங்களிலும அசோசியேட் டைரக்டர்களாகப் பணி புரிந்து இருக்கிறேன்!

எனது மதிப்பிற்குரிய திருலோக சந்தரும ஜெகந்நாதனும குடும

## 'பாடவா உன் பாடலை' ஆரம்பம்

யுனைடெட் பிரண்ட்ஸ் வழங்கும "பாடவா உன் பாடலை" என்ற படத்தின் தொடக்க விழா பிரசாத் ஒலிப்பதிவு கூடத்தில் நடந்தது.

இந்தப் படத்துக்காக புது இசையமைப்பாளர் அனுராக்வின் சென்ட் இசையமைப்பில் வாலி எழுதி சித்ரா குழுவினர் பாடிய "டாப்பு டக்கருதான் மச்சான் உன் நிக்கருதான் டூப்பு மன்னாரு தான்..." என்ற பாடல் ஒலிப்பதிவானது!

நிழல்கள் ரவி – சபீதா ஆனந்த் ஜோடியுடன் செந்தில், கவுண்டமணி, சார்லி, சின்னி ஜெயந்த், பூர்ணம விஸ்வநாதன், குமரிமுத்து டிஸ்கோ சாந்தி நடிக்கிறார்கள்.

எம கென்னடி வசனம எழுத, வினி கதை திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்ய, டி சி ரவி தயாரிக்கிறார்!

"பாடவா உன் பாடலை" படப்பிடிப்பை நாகர்கோவில், முட்டம மற்றும அதைச் சுற்றியுள்ள இயற்கை எழில் சூழ்நத பகுதிகளில் நடத்தத் திட்டமிட்டு உள்ளனர்!

[ந—10]

சொன்னார்.

இப்பொழுது மண்டபத்திலும மதுரையிலும அமைக்கப்பட்டுள்ள இரண்டு முகாமகளில் இவர்கள்

கொழும்பு, பெப் 28

பொலன்னறுவை மாவட்டத்தில் நெல் வயல்களைத் தாக்கும வண்டினத்தை ஒழிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு நீர்ப்பாசன ராஜாங்க அமைச்சர் திரு எச் ஜீ பீ நெல்சன் விவசாய அமைச்சுக்கு உத்தரவு இட்டிருக்கிறார்.

பொலன்னறுவை மாவட்டத்தில் இந்த வண்டினம தாக்கி 50,000 ஏக்கர் நெல் வயல் இது வரை அழிவுற்றுள்ளது.

இந்த வண்டினத்தின் தாக்கம பற்றி ஆராய்வதற்காக விசேட குழு ஒன்றை பொலன்னறுவைக்கு அனுப்பி வைக்குமாறும ராஜாங்க அமைச்சர் உத்தரவு இட்டிருக்கிறார்.

இந்த வண்டுகளை ஒழிக்கும ரசாயன மருந்து பொலன்னறுவையில் இல்லை.

ஆகவே அவற்றை பொலன்னறுவைக்கு உடன் அனுப்பி வைக்கு நடவடிக்கை எடுக்குமாறும அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார்.

(ந-007)

வெளிநாட்டுத் தொலைபேசி

# குறைந்த கட்டண வசதி பயன்படுத்துவோர் குறைவு

கொழும்பு, பெப் 28

குறைந்த கட்டணத்தில் வெளிநாடுகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள வசதியளிக்கும திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள பெரும பான்மையானோர் இன்னும முன்வரவில்லை. சிலரே இது வரை இத் திட்டத்தின் கீழ் குறைந்த கட்டணத்தில் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

தொலைத் தொடர்பு திணைக்களம இதைத் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சில வெளிநாடுகளுடன் நடுநிசியில் இருநது காலை ஐந்து மணிவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டால் கட்டணத்தில் 40 சதவீதம தள்ளுபடி செய்யப்படும என தொலைத் தொடர்பு திணைக்களம அறிவித்திருந்தது.

அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா மற்றும ஆசிய நாடுகள உட்பட 14 நாடுகளுக்கு குறைந்த கட்டணத்தில் தொடர்பு கொள்ள முடியும என திணைக்களம தெரிவித்திருந்தது.

கடந்த முதலாம திகதி தொடக்கம பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி மற்றும இத்தாலி ஆகிய நாடுகளுக்கும இவ்வசதி விஸ்தரிக்கப்பட்டது.

வேலை நேரங்களில் பலரும வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ள முயல்வதால் ஏற்படும நெருக்கடியைக் குறைக்கும எண்ணததுடன் நடுநிசியின் பினனர் குறைந்த கட்டணத்தில் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும இத் திட்டம அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இத் திட்டத்தின் கீழ் இங்கிலாந்துடன் ஒரு நிமிட நேரம தொடர்பு கொள்ள 57 ரூபா அறவிடப்படுகிறது. கனடாவுக்கும அமெரிக்காவுக்கும 63 ரூபா அறவிடப்படுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு 43 ரூபாவும ஆசிய நாடுகளுக்கு முப்பது ரூபாவும வசூலிக்கப்படுகிறது.

[ண—032]

முதன்முறையாக

# சிவகுமாருடன் அர்ஜுன் இணைகிறார்

ஸ்ரீ அத்தனூர் அம்மன் பிக்சர்ஸ் என்னும நிறுவனம் தயாரிக்கும படம, "அண்ணன் என்னடா தமபி என்னடா"

சிவகுமாரும, அர்ஜுனும நடிக்கிறார்கள்,

இருவரும இணைந்து நடிக்கும முதல் படம இது,

நிரோஷா, ரேகா தாரா மனோரமா, செந்தாமரை எஸ் எஸ் சந்திரன், செந்தில் ஆகியோரும நடிக்கிறார்கள்.

## தினபதி சினிமா

திரைக்கதை வசனம எழுதி டைரக்ட் செய்கிறார், விஜய் கிருஷ்ணராஜ், இவர் "ரோசாப்பூ ரவிக்கைக்காரி" "கலதாண்" ஆகிய படங்களின் கதை எழுதியவர் வாழ்க வளர்க, திறமை ஆகிய படஙகளை டைரக்ட் செய்ததுடன் பல படங்களில் வில்லனாகவும நடித்துள்ளவர் விஜய் கிருஷ்ணராஜ்,

அண்ணன் தமபி இடையே எழும உணர்ச்சிமயமான போராட்டஙகளை சித்தரிக்கும கதை "அண்ணன் என்னடா தமபி என்னடா"

இணை இசையுடன் பாடல்களை ஆபாவாணன் எழுத, மனோஜ் கியான் வர்மா இசை அமைக்கின்றார், ராஜராஜன ஒளிப்பதிவைக் கவனிக்க, பூவரசன் தயாரிக்கிறார்.

(ந-10)

ஊட்டியில்

## 'மந்திர மனிதன்'

மூவி மார்க்கெட் என்ற புதிய பட நிறுவனத்தார் "மந்திர மனிதன்" என்ற படத்தைத் தயாரிக்கின்றனர்.

பிரபாகரன் டைரக்ட் செய்கிறார். கதையை ஜெயதேவி எழுதுகிறார். பிரேமி சீனி இசை அமைக்கின்றனர்.

மந்திரவாதியின் ஆவி ஒரு பொமமைக்குள் புகுந்து எப்படி அட்டகாசம செய்கிறது என்பதை மையமாக வைத்து திகில் படமாக இது உருவாகிறது!

பிரபாகரன் கதாநாயகனாக நடிக்கிறார். மற்றும ஆனந்தராஜ், எஸ் எஸ் சந்திரன், ஜனகராஜ், கோவை சரளா நடிக்கின்றனர்.

ஊட்டி, மைசூர் சுற்றியுள்ள பகுதிகளில் படப்பிடிப்பு நடக்கிறது!

[ந—10]

# மத்திய மா. சபையில் எதிர்கட்சியினர் வெளிநடப்பு

கொழும்பு, பெப் 28

கண்டி குவின்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் கடந்த செவ்வாயன்று நடைபெற்ற மத்திய மாகாண தொடர் கூட்டத்தில் சபையில் பிரசன்னமாயிருந்த எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரும சபையை விட்டும வெளி நடப்பு செய்தனர்,

மத்திய மாகாண சபை பிரதேசத்தில் கல்வி நிர்வாகம தொடர்பான சட்டவாக்க நகல் மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின் இறுதியிலேயே எதிர் கட்சியினர் இவ்வாறு வெளிநடப்பு செயதனர்,

கடந்த 13ஆம திகதி மத்திய மாகாண கல்வி அமைச்சர் திரு ஜே ஸ்ரீ இராமநாதன சமர்ப்பித்த இந்த சட்டவரைவு மீது விவாதம நடைபெற்றது,

இது தொடர்பான இறுதி விவாதம கடந்த செவ்வாயன்று நடைபெற்ற போது எதிர்கட்சியினரால் கொண்டு வரப்பட்ட பல்வேறு திருத்தஙகளையும ஆலோசிப்பதற்கு ஒரு நாள் அவகாசம தரும படி எதிர்க்கட்சி பிரதம கொறடா சட்டத்தரணி திரு லால் விஜேநாயக்க வேண்டுகோள் விடுத்தார்,

திருத்தம பற்றிய எழுத்து மூலத்தை சபையில் சமர்ப்பிப்பதாக திரு லால் விஜேநாயக்க எடுத்துக் கூறிய போதிலும சபை அதனை நிராகரித்தது,

இது தொடர்பாக ஆளும கட்சியைச் சேர்ந்த திரு ஏ கதிரேசன் இதற்கு அனுமதிக்க முடியாதென சபையில் எடுத்துரைத்தார்,

பின்னர் எதிர்கட்சியின் பிரதித் தலைவர் திரு ஓ ஏ இராமையா, ஜனநாயக மரபுகளை மீறி இந்தச் சபை செயல்படுவதை ஆதரிக்க முடியாது எனவும இதன் பொருட்டு எதிர்க் கட்சியை சேர்ந்த நாம வெளி நடப்பு செய்கிறோம எனக் கூறியதை அடுத்து எதிர்கட்சியின் பிரசன்னமாயிருந்த 8 உறுப்பினர்களும வெளிநடப்பு செய்தனர்,

சபைக்கு தலைமை தாங்கிய உப தலைவர் திரு பீட்டர் கஙகாகெதர இதனை அடுத்து சட்டவரைவு நிறைவேறியதாக சபையில் அறிவித்தார்,

முதலமைச்சர் திரு டபிள்யூ பி பி திஸாநாயக்காவும முஸ்லிம காஙகிரஸைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும மாலை வேளை சபையில் இருக்கவில்லை,

(ல-ற-017)

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613

சுடர் 18 கதிர் 4422
— 1990 மார்ச் 1 —

# மனதைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்

## புனிதமான விஷயங்களைக் கொண்டு அதனை அப்போதுதான் நிரப்பலாம்

ஒவ்வொரு மனிதனும் தனது புலன்களை அடக்குவது மிக மிக இன்றியமையாததாகும்.

எனது கையில் உள்ள இந்தத் தாளைப் பாருங்கள். சிறிது நேரம் சுருட்டி வைத்திருந்தால் பின்பு அது தன் சுய ரூபத்தைப் பெறுதல் இயலாது. அதனைப் பழைய இயல்பான நிலைக்குக் கொண்டு வர, அதனை மீண்டும் எதிர்ப்புறமாகச் சுருட்டுதல் வேண்டும்.

தெரிந்தோ, தெரியாமலோ எங்கள் இளமைப் பிராயந் தொட்டு எமது மனதை உலக ஆசைகளிலும், சிற்றின்பங்களிலும் சுருட்டி விட்டோம். ஆன்ம வழியான மாற்று வழியில் அதனைச் சுருட்டினால் தான் அது தன் சுய உருவைப் பெறும்.

வெளி விவகாரங்களில் எக்காலமும் மனதை விடாமல், உள் உணர்வைப் பெறுவதற்கு எமது பார்வையை உள் நோக்கிச் செலுத்தினால், நாம் எமது புலன்களை அடக்கி ஒடுக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். தெய்வீக நிலையை எமது மனம் திரும்பப் பெறுவதற்கு அவசியமான முயற்சிகளை நாம் உள் உணர்வு பெறக் கூடிய சாதனைகளை அடையப் பண்படுத்த வேண்டும்.

எந்த வேலையைச் செய்தாலும், எத்தகைய காட்சிகளை நாம் எம மனக்கண் முன் கண்டாலும், எத்தகைய எண்ணங்களை நாம் எடுத்துக் கொள்ளும் போதும், இன்ற தொடக்கம் நாம அவற்றை இறைவன் பால் தாவித்தாலும், அதனை அமமாத்திரத்தே செயல் முறைக்குக் கொணர்ந்து விடுவான்.

ஆன்மீக கோட்பாடுகளை அனுசரிப்பதிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் ஒரு நிபுணன். பரிசுத்தமான சிஷ்யனை அருச்சுனனில் கண்ட கிருஷ்ண பகவான், கருவாக நின்ற உலகத்திற்குக் கீதோபதேசத்தை அருச்சுனன் மூலமாகத் திருவாய் மலர்ந்தருளினார்.

**— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா —**

[தமிழாக்கம்— பொன் கனகராசா]

திருப்ப வேண்டுமென்ற உறுதி பூண வேண்டும்.

கீதையில் உள்ள 18 பகுதிகளில், "சாங்கிய யோகம்" மிக முக்கியமானது. மகாத்மா காந்தி தமது மனம் அமைதியின்றி சஞ்சலப்படும் போது இச் "சாங்கிய யோக"த்தை இரண்டு, மூன்று முறை வாசிப்பாராம்.

அருச்சுனனுக்கு மிகவும் உணர்ச்சியுள்ள சித்தம் உண்டு. எந்த வாக்கியத்தை அவன் அவ

இறை நம்பிக்கையோடு இறைவன் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்குகளைப் பக்தியோடு அவர் போதனைகளை எமது வாழ்வில் நடைமுறைப்படுத்தத் திடசங்கற்பம் செய்வோமானால் நாம் அவருடைய நல்லாசிகளைப் பெற்றவராவோம்.

இவ்வளவு காலமும் தமமனதில் சேகரித்து வைத்திருந்த கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மாணவர் துறப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு வேண்டிய அவசிய நிலை ஏற்பட்டுள்ளது.

மனம் வெறுமையாக இருந்தால், எதையாவது கொண்டு

### சாயி அமிர்தம்

அதனை நிரப்புதல் கூடும். ஆனால், முன் பல்வேறு விஷயங்கள் திணிக்கப்பட்டிருந்தால், வேறு நல்ல விஷயங்களைக் கொண்டு நிரப்ப அங்கு இடமேது?

மனது தூய்மையில்லாமல் இருந்தால், புனிதமான விஷயங்களைக் கொண்டு நிரப்ப முடியாது.

உலகில் அநீதியும், கட்டுப்பாடற்ற தன்மையும், உண்மைக்குப் புறம்பானவையும், பொய்யும் தீய பழக்கங்களும் நிரம்பியிருப்பதாகக் கூறுகிறோம். ஆனால் நாம் அவற்றைச் சரி செய்ய என்னத்தைச் செய்து விட்டோம்!

பிறக்கும் பொழுதும் மனிதன் அழுகிறான். இறக்கும் பொழுதும் மனிதன் அழுகிறான். அதற்கு இடைப்பட்ட காலத்தில் தனக்கு "இது வேண்டும் அது வேண்டும்" என்று அழுகின்றான்.

நீதி குறைந்து குன்றிப்போகும் பொழுது அழுகிறானா? அதனைப் புத்துயிர் பெற அல்லது மறுமலர்ச்சி பெறச் செய்ய அழுதானா? மனிதன் அழ வேண்டும் என்பதற்காக அழுதானா?

குன்றிப் போகும் தருமத்தை நிலைபெறச் செய்ய நாம் சத்தியப் பிரமாணம் செய்யும் பொழுது, இறைவனின் கட்டளைகளின் பிரமாணங்களை நாம் சரிவரக் கடைப்பிடிக்கிறோம்.

பரந்த அன்பு என்றும் நன்மையாக இருப்பதை நடைமுறைப்படுத்தும் பொழுது தான் இந்த மானிடப் பிறப்பிற்கு அதன் உண்மை நிலையையும் பூரணத்துவத்தையும் உணரக் கூடியதாக இருக்கும்.

மாணவர் இதனை உணர்ந்து, தங்கள் வாழ்க்கையை அதற்கமைய அமைத்துக் கொள்ள வேண்டும்.

(ம)

---

## கட்டாய மும்மொழி திட்டம்

தமிழ், சிங்களம் ஆகிய இரு உத்தியோக மொழிகளையும் நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு 3 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆம் ஆண்டுவரை போதிப்பதற்குக் கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இந்த முடிவைச் செயற்படுத்துவதற்காக சகல பாடசாலைகளுக்கும் தேவையான புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளர் கேணல் வி எஸ் குடலிகம மஹரகமையிலுள்ள தேசிய கல்வி நிறுவனத்துக்கு ஏற்கனவே இவற்றிற்கான பணிப்புரையை வழங்கி விட்டார்.

எல்லாப் பாடசாலைகளிலும் தமிழையும் சிங்களத்தையும் கற்பிக்கும் திட்டத்தின் மூலம் புதிதாகப் பலர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள். வேலையற்றிருப்பவர்களில் ஒரு பகுதியினருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கிறது.

அது தவிர விரும்பியவர்கள் தமிழோடு சிங்களத்தையும், சிங்களத்தோடு தமிழையும் படிக்கட்டும் என்று அதற்கு வசதி செய்தால் எல்லோரும் கரிசனையோடு படிப்பார்களா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஜீ சி ஈ பரீட்சை எழுதும் தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும், அதே பரீட்சை எழுதும் சிங்கள மாணவர்களுக்குத் தமிழும் கட்டாய பாடங்கள் என்று இருந்தால் தான் எல்லோரும் பரீட்சையில் சித்தியடைவதற்காக அந்தப் பாடங்களை விழுந்து

---

## ம. மா. சபையின் மீது நல்ல நம்பிக்கை உண்டு

### ஆளுநர் பெருமிதம்

கண்டி, பெப் 27

மத்திய மாகாண சபையின் மீது எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு— ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் வேற்று

எழுச்சியும் வீழ்ச்சியும் அல்லது அதனை நிரந்தரமாக்குவதும் குலைப்பதுமான முடிவுகள் சபை உறுப்பினர்களின் கைகளிலேயே தங்கியுள்ளன—

திரு பீ சி இமபுலான என்னை விடவும் அரசியல் அனுபவம் பெற்றவர்—

திறந்த மனம் கொண்டவர். எனவே உங்கள் எல்லோருக்கும் இப்பொழுது சிறந்த பணிகளைப் புரியலாம—

நான் இந்தப் பதவியில் இருந்து விலகினாலும் எனது சேவை

---

இளம் சிறார்களுக்கு

## இளமையிலேயே சமயத்தை போதிக்க வேண்டும்

### மாகாண சபை அமைச்சர்

தமபதெனி, பெப் 27

இளம சிறார்களுக்கு இளமையிலேயே சமயத்தைப் போதிப்பதில் பெற்றோர்கள்

நாட்டில் கடந்த காலங்களில் குற்றச்செயல்கள் அதிகரித்து காணப்பட்டன—

---

## செய்தித் திரட்டு

### மீன்பிடி பயிற்சி கல்லூரி புனரமைப்பு

திருகோணமலை பெப், 27

மட்டக்களப்பு மீன்பிடி பயிற்சி கல்லூரி புனரமைக்கப்படும்,

44 லட்சம் ரூபாவை இதற்கென வழங்குவதற்கு மாகாண கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக மீன்பிடி, கடற்றொழில் அமைச்சர் திரு பெ இருபாகரன் ,தெரிவித்தார்..

கட்டிட புனரமைப்பிற்காக 39 லட்சம் ரூபாவும் எஞ்சிய தொகை மீன்பிடி பயிற்சிக் கல்லூரி இணைப்பு வீதியைப் புனரமைப்பதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது,

### புதிய பள்ளிவாசல்

வெலிகாமம், பெப் 27

வெலிகாமம் கல்பொக்கை ஜமாஅத்தினர் "மஸ்ஜிதுஸ் ஸலாம" என்ற பெயரில் புதிய பள்ளி வாசல் ஒன்றை நிறுவி வருகின்றனர்,

வெலிகாமம் கொரட்டுவ பிரதேசத்தில் நிறுவப்பட்டு வரும இப்புதிய பள்ளி வாசலின் வேலைகளுக்கு என ஆறு லட்சம ரூபா செலவாகும என மதிப்பிடப்பட்டு இருக்கிறது—

(ஐ—331)

### குழாய்நீர் விநியோகம்

பேருவளை பெப் 27

பேருவளை மருதானை கொரக்கதிவு பகுதிக்கான குழாய் நீர் விநியோகத் திட்டம அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது—

மேல் மாகாண பதில் முதலமைச்சர் ஜனாப் ஏ எம யூஸுப் இதனை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தார்,

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இமதியாஸ் பாக்கிர் மாக்காரும், இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்,

(ஐ—040)

168 மாணவர்

யில் சித்தியடைவதற்காக அந்தப் பாடங்களை விழுந்து விழுந்து படிப்பார்கள்.

அது மட்டுமல்ல, அரசாங்க உத்தியோகங்களுக்கு தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் எல்லோரும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் இருக்குமானால் சிங்கள மாணவர்கள் தமிழையும் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் சிங்களத்தையும் மிகுந்த அக்கறையோடு கற்பார்கள்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அல்லது இரண்டு மொழிகளில் தேர்ச்சியுடைய அரச ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் இப்போது சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எல்லா ஊழியர்களும் மும்மொழிகளிலும் கடமையாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவே சலுகைகள்.

சலுகை அளிக்கும் திட்டத்தை விட கட்டாயப்படுத்தும் நடைமுறையே எதிர்பார்க்கப்படும் பலனைத் தரும்.

உத்தியோக மொழிகளான தமிழ், சிங்களத்தோடு இணைப்பு மொழியான ஆங்கிலத்தையும் பாடசாலைகளில் கட்டாய பாடங்களாகக் கற்பிப்பதும் ஒரு காலக்கெடுவுடன் அரசாங்க உத்தியோகத்துக்கு மும்மொழித் தேர்ச்சி அவசியம் என்ற நிபந்தனை விதிப்பதும் மக்களுக்கு சிறந்த சேவை கிடைப்பதற்கு வழி செய்வதாக அமையும்.

அத்துடன் —

நாட்டு மக்களிடையே இன, மொழிவாரியான குரோதங்கள் ஏற்படமாட்டா. மாறாக, புரிந்துணர்வும் நல்லெண்ணமும் நட்புறவும் ஏற்படும்.

அரசாங்க உத்தியோகங்கள் இன விகிதாசார அடிப்படையிலேயே வழங்கப்பட்டிருக்கின்றன. அதனால் எந்த ஒரு மொழி பேசுபவரும் மற்ற மொழிகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்று அந்த மொழிகளைப் பேசுபவர்களை ஒதுக்கி விடுவார்கள் என்று அஞ்சுவதற்கு இடமில்லை.

ஆகவே மும்மொழிகளையும் பாடசாலைப் பரீட்சைக்கும் அரசாங்க உத்தியோகத்துக்கும் கட்டாயமாக்குவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

மீது எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு. ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் வேற்றுமைகளை மறந்து இங்கு இயங்குகிறார்கள். ஆஸ்திரேலிய நாட்டுக்குச் சென்றதும் அங்கிருந்து சிறந்த பசுக்களை இப் பிரதேசத்துக்கு அனுப்பி பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வேன்.

இவ்வாறு கூறினார் மத்திய மாகாண சபை ஆளுநர் திரு ஈ எல் பி ஹுருள்ளே.

கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்துப் பேசும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய மாகாண சபை இதனை ஏற்பாடு செய்திருந்தது. சபைத் தலைவர் திரு டி பீ சமரதுங்க தலைமையில் வைபவம் இடம்பெற்றது. அங்கு திரு ஹுருள்ளே தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது.

இந்த மாகாண சபையின் உறுப்பினர்களின் கைகளிலேயே தங்கியுள்ளன.

நீங்கள் ஆற்ற வேண்டிய பணிகளில் இளைஞர்களின் பிரச்சினைக்கும் காணிப் பிரச்சினைக்கும் வீடு நிர்மாணப் பணிக்கும் முக்கியத்துவம் கொடுங்கள்.

அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சி என பாகுபாடு காட்ட வேண்டாம். நான் இதற்கு ஆதர்ஷமாகவே இயங்கினேன்.

மாகாண சபை வேலைத் திட்டங்களிலேயே பலனும் தங்கியிருக்கும். இந்த மாகாண சபைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள

நான் இந்தப் பதவியில் இருந்து விலகினாலும் எனது சேவை இங்கு தொடர்ந்து கொண்டே இருக்கும். பால் உற்பத்தியைப் பெருக்க ஆஸ்திரேலியாவுக்குச் சென்று பொருளாதார ரீதியாக நான் உழைப்பேன்.

நான் ஒரு விவசாயி. இதன் மூலம் மத்திய மாகாணத்தின் அபிவிருத்திக்கு நான் தொடர்ந்தும் முயற்சிப்பேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த வைபவத்தில் ஆளுநரின் சேவையைப் புகழ்ந்து முதலமைச்சர் உட்பட மற்றும் உறுப்பினர்களும் பேசினர்.

[ஐ—017]

மையிலேயே சமயத்தைப் போதிப்பதில் பெற்றோர்கள் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் திரு டீ பி விஜயதுங்க கூறினார்.

தம்பதெனிய பௌத்த விகாரையில் அண்மையில் அமைச்சர் தலைமையில் சமயக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

இளம் மாணவர்களிடத்தில் சமய அறிவு குறைந்ததனால்தான்

பட்டன.

சமயத்தைப் போதிப்பதில் பெற்றோர்களும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலைகளில் சமய நெறிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அரசாங்கம் சமயத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது.

எமது நாட்டில் சமயத்துறைக்கு பூரண சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

மற்றும் பலர் அங்கு பேசினர்.

[ஐ—138]

(ஐ-040)

## 168 மாணவர் பரீட்சையில் சித்தி

குளியாப்பிட்டி பெப் 27

குளியாப்பிட்டிய தொகுதியில் ஐந்தாம் வருட புலமைப் பரிசில் பரீட்சையில் 168 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்,

குளி/ அஸ்அத்தும் பாலர் பாடசாலையில் 123 மாணவர்களும்,

குளி/ றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் 23 பேரும், றோமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையில் 22 பேரும் சித்தி அடைந்துள்ளதாகப் பாடசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர்,

(ஐ-138)

## 80ஆவது வருடாந்த கந்தூரி

கொழும்பு, பெப். 28

மாத்தளை, கோட்டகொடையில் அஷ்ஷெய்கு அப்துல் முத்தலிப் ஒலியுல்லாஹ்வின் பெயரால் நடைபெறும் வருடாந்தக் கந்தூரி வைபவம் எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் மாத்தளை கோட்டகொடை பள்ளிவாசலில் நடைபெறும்.

80 ஆவது வருடமாக நடைபெறும் இந்தக் கந்தூரிக்கான ஏற்பாடுகளை மாத்தளை முஸ்லிம் டெயிலர் வாலிபர் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

அகில இலங்கை ரீதியாக வருகை தரும் மக்களின் பிரயாண வசதிக்காக மத்திய பிரதேச போக்குவரத்துச் சபையின் மாத்தளை டிப்போ மாத்தளையிலிருந்து கோட்டகொடை வரை விசேட பஸ் சேவைகளை நடத்த பல ஒழுங்குகளை செய்துள்ளது.

[ஐ—மு]

பண்டாரவளை கல்வித் திணைக்களத்தில்

# சேவைகள் வழங்குவதில் அதிகாரிகள் அசிரத்தை

பண்டாரவளை கல்வித் திணைக்களத்தில் தமிழ் பேசும் ஆசிரியர்களுக்கு சேவைகள் வழங்குவதில் அதிகாரிகள் தொடர்ந்தும் அசிரத்தை காட்டி வருகின்றனர்.

இக் கல்விப் பிரதேசத்தில் கடமை புரியும் தமிழ் பேசும் ஆசிரியர்கள் பலர் சொல்லொணா பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் சேவையாற்றும் ஆசிரியர்கள் படும் கஷ்டங்கள் பற்றி இவ் அதிகாரிகள் எவ்விதத்திலும் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை.

ஆசிரியர்கள் திணைக்களம் சென்று தம் பிரச்சினைகளை அதிகாரிடம் எடுத்துரைப்பினும் ஏதாவது நொண்டிச் சாட்டைக் கூறி மழுப்பி விடுவது இவர்களது வழக்கமான செயலாகி விட்டது.

திணைக்களத்தில் நியமிக்கப்பட்டிருக்கும் தமிழ் பேசும் அதிகாரிகளால் எமக்கு எவ்வித பயனும் கிடைப்பதில்லை. இங்குள்ள ஏனைய அதிகாரிகள் காட்டும் கரிசனையில் கடுகளவேனும் நம்மவர்களிடம் இல்லையே என பலரும் தங்கள் மனக்கசப்பினை வெளிப்படுத்துகிறார்கள்.

இனியும் இந் நிலையைத் தொடர விடாது அதிகாரிகள் உரிய முறையில் செயல்பட வேண்டும்.

இன்றேல் திறமையாக செயல்படக் கூடியவர்களையும் ஆசிரியர்களின் பிரச்சினைகளை தகுந்த முறையில் தீர்த்து வைக்கக் கூடியவர்களையும் தகுதி வாய்ந்த அதிகாரிகளாக நியமிக்க, திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுவே எம் அனைவரினதும் வேண்டுகோளாகும்.

— எஸ் செல்வராஜா,
பதுளை.




## தொழிற் பயிற்சி போதனை

கோப்பாய் பெப் 27

ஐக்கிய நாடுகள் உதவித் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 29 பாடசாலைகளில் முறைசாரக் கல்வித் திட்டத்தின் கீழ் தொழிற்பயிற்சி போதனை நடைபெறவுள்ளது.

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த தொழிற் பயிற்சி நெறியில் 50க்கு மேற்பட்ட தொழில்துறைகளில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது,

பயிற்சி நெறிகளுக்கு இந்த வருடத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை யாழ் மாவட்ட கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

(ஐ-142)

ஆபிரிக்க காங்கிரஸ் எதிர்நோக்கும்

# சவால்களை சமாளிக்க நிதி உதவி தேவை

## உலகநாடுகளிடம் மண்டேலா

லூசாக்கா, பெப். 28

**தென் ஆபிரிக்காவின் அண்மைக்கால மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்கு சவாலாக அமைந்துள்ளன. இந்தச் சவாலைச் சமாளிப்பதற்கு உலக நாடுகள் உதவவேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்தார் கறுப்பர் தலைவர் நெல்சன் மண்டேலா.**

லூசாக்கா வந்து சேர்ந்த கறுப்பர் தலைவர் மண்டேலாவுக்கு அங்கு பலத்த வரவேற்புக் கிட்டியது. நீண்ட காலமாக அஞ்ஞாதவாசம் இருந்து வரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் பலரை அணைத்து முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிக்காட்டினார் மண்டேலா.



மண்டேலா

27 ஆண்டு காலம் தென் ஆபிரிக்க சிறைகளில் காலந் தள்ளிய மண்டேலா விடுதலையின் பின் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

தெரில்லா இயக்கத்தை வழி நடத்திய தனது சகாக்களுடனும் ஸாம்பிய ஜனாதிபதி கெனத் கவுண்டாவுடனும் பேச்சுவார்த்தை நடத்திய மண்டேலா தொடர்ந்து கூறியதாவது:

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தடை நீக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. தென் ஆபிரிக்காவில் மறுசீரமைப்பு மூலம் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகளை நாம் வரவேற்கிறோம். ஆயினும் அவற்றின் மூலம் அநேக பிரச்சினைகளும் உருவாகியுள்ளன. அவற்றை ஆதாரத்துடன் வெளியிட முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. உலக நாடுகள் எமக்கு நிதி உதவி உட்பட சகல விதத்திலும் உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு மண்டேலா கேட்டுக் கொண்டார்.

கனடா உட்பட மேற்கத்திய அரசாங்கங்கள் பலவற்றின் தலைவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நடத்தும் 30 ஆண்டு காலப் போராட்டத்தை இடைநிறுத்த வேண்டுமென கனடா வெளிநாட்டமைச்சர் ஜோ கிளார்க் கேட்டுக் கொண்டார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தென் ஆபிரிக்காவில் சட்டபூர்வ அரசியல் கட்சியாக இயங்க வேண்டும். அதற்கு காமன்வெல்த் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரமபால் உதவி நிதி ஒன்றை ஆரம்பித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் மண்டேலா கேட்டுக் கொண்டார்.

[எ]

## இஸ்ரவேல் கி.ஜெர்மனியுடன் ராஜதந்திரஉறவு?

வார்சோ பெப் 28

23 வருடங்களின் பின்னர் போலந்துடன். இஸ்ரவேல் கடந்த செவ்வாய்க்கிழமை ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. அத்துடன் கிழக்கு ஜெர்மனியுடனும் அவ்வித உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்கு யுத்தத்தையடுத்தே போலந்துடனான உறவுகளை இஸ்ரவேல் முறித்துக் கொண்டது. ஹங்கேரி, செக்கோஸ்லவேக்கியாவையடுத்து இஸ்ரவேலுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் மூன்றாவது கிழக்கு ஐரோப்பிய நாடு போலந்தாகும்.

(ந)

## நிக்கரகுவா தேர்தல்: தோல்வியை ஏற்பதாக ஓர்டேகா அறிவிப்பு

மனோகுவா, பெப். 28

நிக்கரகுவா தேர்தலில் தோல்வி கண்ட ஜனாதிபதி டானியல் ஓர்டேகா தாம் தோல்வியை ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறார்.

தனது சான்டினிஸ்ட்டா இயக்கம் தோல்வியை ஏற்கும் வேளையில் "கன்சர்வேட்டிவ் எதிர்க் கட்சி" ஒன்றினை அமைக்கப் போவதாகவும் அறிவித்திருக்கிறது.

ஓர்டேகா எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி தனது அதிகாரங்களை புதிய ஜனாதிபதி வயலெட்டா சமோரோவிடம் கையளிப்பார்.

தாம் மீண்டும் ஆட்சிக்குவரும் காலம் தூரத்திலில்லை என அவர் உறுதி அளித்தார். அதிகாரத்தில் தாம் திரும்பும் வரை எதிர்க் கட்சியில் நாம் அங்கத்துவம் வகிப்போம் என ஓர்டேகா தெரிவித்தார்.

டானியல் ஓர்டேகாவின் ஆட்சிக் காலத்தில் பல தீவிர மறுசீரமைப்புக்கள் இடம்பெற்றன. விவசாயம், காணி சொந்தமாகுதல், தொழிலாளர் உரிமை, வங்கி நிர்வாகம், வர்த்தகப் பிரிவு என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன.

தனது 10 வருட ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்களின்படி கருமங்கள் நடைபெற வேண்டுமென்பதே எனது நோக்கமெனவும் ஓர்டேகா கூறினார்.

(எ)

# உலகச் செய்திகள்

இந்திய மாநிலத் தேர்தல்

## பீஹாரில் மட்டும் 82 பேர் வன்முறைகளுக்குப் பலி

புதுடில்லி, பெப் 28

வட இந்திய மாநிலமான பீஹாரில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளின் எதிரொலியாக சுமார் 82 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது.

இத்தகவலை இந்திய செய்தி ஸ்தாபனம் புதனன்று வெளியிட்டது.

வாக்களிப்பு நடந்த ஏனைய ஏழு மாநிலங்களிலும் பரவலாக வன்முறைகள் இடம்பெற்றன. இவற்றில் பீஹார் மாநிலத்தின் நிலைமை வெகு மோசமாக இருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

மத்திய பிரதேசம், ஹிமாச்சல் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், ஒரிஸா — மகாராஷ்டிரா — அருணாச்சல் பிரதேசம், பீஹார் மாநிலங்களிலேயே சட்டசபைத் தேர்தல்கள் நடந்தன.

இந்தியப் பிரதமர் விஸ்வநாத் பிரதாப் சிங்கின் மூன்று மாத கால அரசாங்கத்துக்கு முதலாவது பலப்பரீட்சையாக இந்த மாநிலத் தேர்தல் அமைந்திருக்கிறது.

காந்தியின் காங்கிரஸ் கட்சி 8 மாநிலங்களிலும் பலத்த தோல்வியையே அடையுமென அரசியல் அவதானிகள் தெரிவித்திருந்தனர்.

இந்திய மாநிலங்களில் வறிய மாநிலமெனக் கருதப்படும் பீஹாரில் குற்றச்செயல்களுக்குக் குறைவில்லை. அரசியலும் இங்கு முக்கிய பங்கினை வகிக்கின்றது. இந்த மாநிலத்தில் ராஜீவ் காந்தி வெற்றி பெறக் கூடுமென இன்னுமொரு சாரார் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

தேர்தல் நடந்த மாநிலங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினர் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

ஆயினும் வாக்குச்சாவடிகளின் குழப்பங்களை கட்டுப்படுத்த அவர்களால் இயலவில்லை.

பீஹார் தலைநகரான பட்னாவில் இருந்த வாக்குச்சாவடியில் வாக்குப்பெட்டிகளில் தமக்கு



# வடஐரோப்பாவில்

# வடஐரோப்பாவில் பயங்கர சூறாவளி

## 48 பேர் உயிரிழப்பு

ஹம்பேர்க், பெப்- 28

வட ஐரோப்பாவில் வீசிய பயங்கர சூறாவளிக்கு இது வரை 48 பேர் பலியாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது- நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்-

மணிக்கு 160 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய சூறாவளியால் மரங்கள் பிடுங்கி எறியப்பட்டன வீடுகள் பலவற்றின் கூரைகள் தாக்கி வீசப்பட்டன- வெள்ளம பெருக்கெடுத்தோடியது-

மேற்கு ஜெர்மனியில் வீசிய பயங்கர சூறாவளிக்கு 14 பேர் பலியாகினர்- கிழக்கு ஜெர்மனியில் 3 பேர், பிரிட்டனில் 14 பேர் சூறாவளிக்குப் பலியானதாக அறிவிக்கப்படுகிறது-

பிரான்ஸில் 10 பேர் இறந்தனர்- பெல்ஜியத்தில் ஐந்து பேர், நெதர்லாந்தில் ஒருவர், சுவிட்சர்லாந்தில் ஒருவர் இறந்திருப்பதாக கணக்கெடுப்புகள் கூறுகின்றன-

பெருக்கெடுத்தோடிய ஆற்று நீரால் அடித்துச் செல்லப்பட்டும வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்பட்டும இவர்கள் இறந்துள்ளனர்

ஹம்பர்க் நகர துறைமுகப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன-

மேற்கு ஜெர்மனியில் வட பிறிசியன் கிராமத்தில் நூற்றுக்கு மதிகமான மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்-

சுவிட்சர்லாந்தில் பயங்கர புயல் போக்குவரத்துக்களையும தடை செய்தது-

(எ)

## வங்.படகு விபத்து: ஐவர் பலி 65 பேர் காணவில்லை

டாக்கா, பெப்- 28

தென் வங்காளதேசத்தில் நடந்த படகு விபத்தொன்றில் 5 பேர் உயிரிழந்தனர்- 65 பேரைக் காணவில்லையென அறிவிக்கப்படுகிறது-

100 முஸ்லிம யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற படகு சரக்குக் கப்பலொன்றுடன் மோதி விபத்தச் சம்பவித்தது- 30 பேர் காப்பாற்றப்பட்டனர்-

(எ)



ரஷ்ய - அமெரிக்க மக்கள் உச்சிமாநாடு அண்மையில் ரஷ்யாவில் நடந்தது- விண்வெளி வீரர்களும பத்திரிகையாளர்களுமான யூரி கிரிகுன் - ஜோர்ஜிஸ்டீக் கோவ் அமெரிக்க பிரதிநிதிகளு டன் உரையாடுவதைக் காண்க- (எ*ச)

# காஷ்மீர் நெருக்கடியால் இந்தியா - ஐ. நா. சபைக்குமிடையே பிளவு ஏற்படும் அபாயம்

புதுடில்லி, பெப் 28

சர்ச்சைக்குரிய ஹிமாலய மாநிலமான காஷ்மீர் நெருக்கடியால் இந்தியாவுக்கும ஐ நா சபைக்குமிடையே பிளவு ஏற்படலாம என அச்சம தெரிவிக்கப்படுகிறது-

காஷ்மீருக்கு ஐ நா பிரதிநிதி ஒருவர் விஜயம செய்யும திட்டத்தை இந்தியா ஏற்க மறுத்துள்ளது- அந்தப் பிரதிநிதிக்கு விசா வழங்கவும இந்தியா மறுக்குலாம எனக் கருதப்படுகிறது-

எதிர்வரும 7 ஆம திகதி ஐ நா பிரதிநிதி காஷ்மீர் செல்லத் திட்டமிட்டிருக்கிறார்-

இந்தியாவின் உள்ளூர் விவகாரத்தில் தலையிட ஐ நா சபை முயற்சி மேற்கொள்கிறதென ஐ நா பிரதிநிதியின் உத்தேச விஜயம குறித்து இந்தியா கண்டித்திருக்கிறது-

காஷ்மீர் முஸ்லிமகள் சுதந்திர நாடொன்றை அமைக்க பெரும போராட்டம நடத்தி வருகின்றனர்-

கடந்த சில மாதஙகளாக இங்கு இடமபெற்ற வரும குழப்பஙகளில் பலர் உயிரிழந்துள்ளனர்.

[எ]

# பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சி தலைவருக்கு சிறைத் தண்டனை விதிப்பு

மணிலா, பெப்- 28

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கொரஸோன் அக்குவினோவின் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றதாக குற்றம சாட்டப்பட்டிருக்கும எதிர்க் கட்சித் தலைவர் ஜுவான் பொன்ஸ் என்ரைலுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது-

ஜுவான் பொன்ஸ் என்ரைலின் சட்டத்தரணிகள் அவரை விடுதலை செய்யுமாறு புதன்கிழமை உயர் நீதிமன்றத்தை வேண்டினர்.

தாம் குற்றவாளி அல்ல எனக் கூறும என்ரைல் நான் விடுதலை செய்யப்படுவேன் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருக்கிறதெனத் தெரிவித்திருந்தார்-

...

60 வயது என்ரைல் பணம படைத்த ஒரு வர்த்தகராவார் அத்தோடு அவர் சட்டத்தரணியாகவும விளஙகுகிறார்-

இவரது விடுதலைக்காக சட்டத்தரணிகள் அப்பீல் செய்வார்கள்-

(எ)

பீஹார் தலைநகரான பட்னாவில் இருந்த வாக்குச்சாவடியில் வாக்குப்பெட்டிகளில் தமக்கு சார்பான வேட்பாளர்களுக்கென வாக்குகளை திணிக்கப் பலர் முயன்றதால் குழப்பம கூட்டு மீறியது- இங்கு பொலீஸார் சுட்டதால் மூன்று பேர் உயிரிழந்தனர்-

முஸாபர்பூரில் ஊரடஙகு அமுல் செய்யப்பட்டது- இஙகு 10 பேர் பலியாகினர்-

மஹாராஷ்டிராவில் 280 வாக்குச் சாவடிகள், ஹரியானாவில் 8 வாக்குச் சாவடிகளில் மீண்டும வாக்களிப்பு நடைபெறவுள்ளது-

(எ)

## கொலம்பியாவில் பி. பி. ஸி. நிருபர் சுட்டுக்கொலை

பொகோடா பெப்- 28

பி பி ஸி ஒலிபரப்பு நிறுவனத்தின் நிருபரும மற்றும விவசாய தலைவர்கள் மூவரும சுட்டுக் கொல்லப்பட்டனர்

கொலம்பிய தலைநகரான பொகோடாவுக்கு வட கிழக்கில் 170 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள சிமிடரா என்ற இராமத்தில் கடந்த திஙகட்கிழமை இரவு இச் சம்பவம நடந்தது

தொழிற் சஙகவாதிகளையும விவசாய தலைவர்களையும அடிக்கடி கொலை செய்துவரும வலதுசாரி "கொலைப்படையினரே" இக் கொலைக்கு காரணமாக இருக்கலாம என நம்பப்படுகிறது-

மேற்படி சமபவத்தையடுத்து கொலம்பியாவில் கடந்த 14 மாத காலத்தில் 14 பத்திரிகை மற்றும் வானொலி நிருபர்கள் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தகது-

(ந)

# கைதிகளில் 29 சதவீதம் போதைவஸ்து நபர்கள்

கொழும்பு, பெப். 28

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளில் 29 சதவீதமானோர் போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டோராவர்.

இவர்களை ஏனைய (குற்றவாளிகளுடன்) சிறைக்கைதிகளுடன் வைக்காது தனிமைப்படுத்தி புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படும்.

நீதி நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு வின்சென்ட் பெரேராவின் ஆலோசனையின் பேரில் மேற்படி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

போதைப் பொருள் குற்றச்சாட்டின் பேரில் சிறைவாசம் அனுபவிக்கும் சிறைக் கைதிகளை ஏனைய சிறைக்கைதிகளுடன் ஒன்றாக வைத்திருப்பதால் அவர்களும் போதைப் பொருள் பாவனைக்கு பழக்கப்படலாம்.

அத்துடன் தேவையற்ற பிரச்சினைகள் நேரிடவும் வாய்ப்புண்டு. இதனாலேயே இவர்களை தனிமைப்படுத்தி புனர்வாழ்வு அளிக்க திட்டமிடப்பட்டது என்று நீதி நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி கண்டி பள்ளேகலையிலுள்ள திறந்த வெளி சிறைச்சாலைக்கு அருகில் போதைப் பொருள் சிறைக் கைதிகளுக்கான புனர்வாழ்வு நிலையம் அமைக்கப்படும்.

இந்த புனர்வாழ்வு நிலையத்தை அமைப்பது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

நீதி நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி பி ஹேரத் தலைமையிலான இந்த கமிட்டியில் நாடாளுமன்ற விவகார ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு கே ஏ எஸ் குணசேகர — பேராசிரியர் நந்ததாச சோதாகொட — நீதி அமைச்சின் உதவிச் செயலாளர் திரு லலனி எஸ் பெரேரா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த புனர்வாழ்வு நிலையம் இம் மாதம் 4 ஆம் திகதி பிரதமர் திரு டீ பீ விஜேதுங்கவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

(ஜ—வ)

## நீர் விநியோக திட்ட வேலைகள் பூர்த்தி

மடவளை, பெப் 27

ஹ ...பத்துவ நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் அளவத்துகொட உப நீர் விநியோகத் திட்ட வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

மேற்படி தேர்தல் தொகுதியில் பின்லாந்து அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர் விநியோகத் திட்டத்தின் அளவத்துகொட உப நிலைய வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக அளவத்துகொடை, குருகொடை, நீரெல்லை, மேச்சேனை போன்ற பகுதிகளிலுள்ள மக்கள் வெகு விரைவில் நீர் விநியோக இணைப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

[ஐ—431]

## மக்களும் பதவியும்

### சமாதான நீதிவான்

கொழும்பு, பெப் 28

கொழும்பு மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த திரு பொன்னம்பலம் தயானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் இவர் கொழும்பு மாவட்ட நீதிபதியின் முன்னால் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பொது எழுதுவினைஞர் சேவையில் 30 வருடங்கள் அனுபவம் உள்ள திரு பொன்னம்பலம் தயானந்தன், 1985 ஆம் ஆண்டு சேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், ஆரம்பக் கல்வியை யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார்.

கல்வி கற்கும் போதே விளையாட்டுத் துறையில் மிகவும் பிரசித்தி பெற்ற திரு பொன்னம்பலம் தயானந்தன், இளைப்பாறிய காலத்தில் தன்னை சமூக சேவையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

(ஐ—கு)

### ஆணையாளராக நியமனம்

கிண்ணியா, பெப் 27

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவு புதிய ஆணையாளராக திரு எஸ் தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு தியாகராஜா கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் பல வருடங்களாக பிரதம லிகிதராக கடமையாற்றி சாதி பாகுபாடின்றி சேவையாற்றி வருபவரும் ஆவார்.

(ஐ—151)

### அரபுக் கல்லூரி நூற்றாண்டு விழா

கொழும்பு, பெப். 28

காலி கோட்டை பஹ்ஜத்துல் இப்றாஹிமிய்யா அரபுக் கல்லூரியின் நூற்றாண்டு விழா விரைவில் கொண்டாடப்படும்.

கல்லூரி அதிபர் அல்ஹாஜ் எம ஓ பத்ஹுர் ரஹ்மான் (பஹ்ஜி) இத்தைத் தெரிவித்

## ஆஸ்பத்திரிகளில் கவனயீன மரணங்கள் தொடர்பான

# ஒழுக்காற்று நடவடிக்கை தடை ஏற்படுத்த வேண்டாம்

### தொழிற்சங்கங்களிடம் அமைச்சர் ரேணுகா

கொழும்பு, பெப். 28

டாக்டர்களினதும், தாதிகளினதும், ஆஸ்பத்திரி ஊழியர்களினதும் கவனயீனம் காரணமாக இடம் பெறும் மரணங்கள் சம்பந்தமாக எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படும் வகையில் நடந்து கொள்ள வேண்டாம்.

சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ரணவீர இப்படி தொழிற் சங்கங்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

எந்தத் தராதரத்தில் இருந்தாலும் குற்றம் புரிவோர் தண்டிக்கப்பட வேண்டும் என திருமதி ரணவீர தெரிவித்தார்.

மாத்தறை, இரத்தினபுரி மற்றும் பொரளை ஆஸ்பத்திரிகளில் ஒரு மாதத்திற்கு இவ்வாறான மூன்று மரணங்கள் இடம் பெற்றுள்ளன.

இதன் காரணமாக ஒரு டாக்டரும், இரண்டு தாதிகளும் ஒரு மருத்துவச்சியும் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ—ற)

## ஹெரோயின் கடத்த முயன்றவர் சிக்கினார்

கொழும்பு பெப் 23

வெளிநாட்டில் இருந்து ஹெரோயினை கடத்தி வந்த நபர், ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் பிடிபட்டார்.

மேற்படி நபரின் "சூட்கேஸை" சுங்க அதிகாரிகள் சோதனையிட்டனர். அந்த சூட்கேஸினுள் 3 கிலோ எடையுள்ள ஹெரோயின் 4 பைக்கட்டுகளில் காணப்பட்டன.

உதவி சுங்க அதிகாரியான திரு சேனாதிராஜா சுந்தரலிங்கம் பொலீஸாரின் உதவியுடன் சந்தேக நபரை நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் திரு என் மகேந்திரராஜா முன்னிலையில் ஆஜர் செய்தார்.

அதனையடுத்து சந்தேக நபர் மார்ச் முதலாம் திகதி (இன்று) வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

(ந—வ)

## அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட

# பீங்கான் களிமண்ணை உபயோகப்படுத்தாமல் இருப்பது குறித்து கவலை

களுத்துறை, பெப். 27

களுத்துறை மாவட்டத்தில் பீங்கான் (களிமண்) செய்யக் கூடிய மூலப் பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டும் அதனை உபயோகப்படுத்தாமல் இருப்பது குறித்து கவலை தெரிவிக்கப்படுகிறது.

அதுபற்றி மேலும் கூறப்படுவதாவது: —

களுத்துறை மாவட்டத்திலுள்ள — மத்துகம, "தெபுவன" பகுதியில் சில வருடங்களுக்கு முன்பு "பீங்கான்" செய்யக் கூடிய "களி மண்" கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக, சிறு கைத்தொழில் திணைக்களம் இது வரையிலும் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதாக, இப்பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

"அரப்பலகந்த" முதல் "களு கங்கை" கரையோரம் வரை இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபன அதிகாரிகள் — ஜப்பான் நாட்டுக் குழு ஒன்றுடன் பரிசோதனை நடத்தினர்.

இப்பரிசோதனையின் போது இந்த மண் பெறுமதிமிக்க "பீங்கான் களிமண்" என கணிப்பிடப்பட்டது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த மண் தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுப்பின், சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

இவ்வாறு இப்பகுதி பிரதேச வாசிகள் கருதுவதாகக் கூறப்படுகிறது.

(இ—040)

## நண்பர்களுடன் கடலில் குளிக்க சென்ற

# இளைஞர் நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, பெப் 28

நண்பர்களுடன் கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார்.

குருநாகல் பள்ளித்தோட்டத்தைச் சேர்ந்த கலீல் ரஹ்மான் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்.

...லில் குளிக்கச் சென்றோம், சுமார் பத்து நிமிட நேரம் நாம் கடலில் நன்று குளித்தோம்,

சிறிது நேரத்தில் கலீலை காணவில்லை. நான் இதுபற்றி பாருக்கிடம் "கலீல் எங்கே?" என்று வினவினேன்.

தான் காணவில்லை என்று கூறவே, நாம் இருவருமாகச் சேர்ந்து கலீலை தேடினோம்,


# சிறிமாவின் கூட்டங்கள் நடைபெறவிருந்தபோது ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது

### மனுதாரர் தரப்பில் சாட்சியம்

கொழும்பு, பெப் 28 அனில் ஒபேசேகர, நவம்பர் 18

சட்டத்தரணி— யாப்பாஹுவையில் திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொள்ளும் கூட்டம் எப்போது நடைபெற

### சமாதான நீதிவான்



கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி திரு டீ ஜே எலோய் பெரேரா முன்னிலையில் இவரது மரண விசாரணை நடைபெற்றது,

இறந்தவரின் நண்பரான சந்திரபால (வயது 23) என்பவர் இங்கு சாட்சியமளிக்கையில் கூறியதாவது—

சமபவதினம மாலை 4 மணிக்கு கலீல், பாருக் ஆகியோருடன் நான் வெள்ளவத்தை கடலில் நீராடச் சென்றேன்... ஆனால் அவரை எம்மால் காண முடியவில்லை, மறுநாட் காலை 5-00 மணியளவில் அவரின் சடலம் கரை ஒதுங்கியது,

கொழும்பு பெரியாஸ்பத்திரியின் பிரதான சட்ட வைத்திய அதிகாரி திரு எம எஸ் எல் சல்காது பிரேத பரிசோதனையை நடத்தினார்,

விசாரணையின் முடிவில் நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட திடீர் மரணம எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஐ-வ)

### போதைப் பொருளுக்கு அடிமையான

# குடும்பஸ்தர்

## தீ மூட்டி தற்கொலை

கொழும்பு, பெப் 28

போதைப் பொருளுக்கு அடிமையான குடும்பஸ்தர் ஒருவர் தனக்குத்தாமே தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார்,

கொழும்பு மருதானை இரண்டாம ஒழுங்கையைச் சேர்ந்த சுப்பையா சிறில் (வயது 33) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்,

கொழும்பு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி திரு டீ ஜே எலோய் பெரேரா முன்னிலையில் இவரது மரண விசாரணை நடைபெற்றது,

இறந்தவரின் மனைவியான செல்லையா ரஞ்சன் (வயது 28) இங்கு சாட்சியமளிக்கையில் கூறியதாவது—

"காலஞ் சென்றவர் எனது கணவர், அவர் தினசரி மது அருந்துவார், சமபவ தினய இரவு 7 மணியளவில் அவர் சமையலறையிலிருந்து தலைக்கு மண்ணெண்ணெயை ஊற்றினார், பின்னர் வெளியே வந்து சிறிது நேரம அமர்ந்திருந்தார்,

பின்னர் தனக்குத்தானே தீமூட்டிக் கொண்டார், இதனால் எரிகாயங்களுக்கு உள்ளான அவரை எனது தமபி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தார், அங்கு அவர் இறந்து விட்டார்,

கொழும்பு பெரியாஸ்பத்திரியின் பிரதி சட்ட வைத்திய அதிகாரி திரு எல் பி எல் டி சில்வா பிரேத பரிசோதனையை நடத்தினார்,

விசாரணைகளின் முடிவில் தற்கொலை மரணம எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

(ஐ-வ)

# ஜனாதிபதி தேர்தல் வழக்கு

கொழும்பு, பெப் 28

1988 ஆம ஆண்டு நவமபர் மாதம திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொள்ளவிருந்த மூன்று கூட்டங்கள் நடைபெறவிருந்த போது அப்பகுதிகளில் ஊரடங்கு சட்டம பிறப்பிக்கப்பட்டது, இரியால, கல்கமுவ, யாப்பஹுவ ஆகிய தொகுதிகளே அவை,

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதியரசர் எம ஜமீல் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மனுதாரர் தரப்பு சாட்சி பி பி ரஞ்ஜித் பத்மபந்து பிரேமரத்ன இவ்வாறு தெரிவித்தார்,

திரு பிரேமதாச ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க, நீதியரசர்கள் எச் டி தம்பையா, ஜி பி எஸ் டி சில்வா, எம ஜமீல், பி இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது,

சாட்சியை பிரதிவாதி தரப்பில் சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணை செய்த போது "கல்கமுவையில் நவமபர் 19 ஆம திகதியா அல்லது இருபதாம திகதியா கூட்டம நடைபெற்றது" என்று கேட்டபோது "சரியான திகதி தனக்கு ஞாபகமில்லை" என்று சாட்சி தெரிவித்தார்,

இச்சமயம குறுக்கிட்ட மனுதாரர் தரப்பு சட்டத்தரணி அனில் ஒபேசேகர, நவமபர் 18 ஆம திகதி ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதால் கல்கமுவையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம ரத்துச் செய்யப்பட்டது என்று முன்னரே சாட்சியமளிக்கப்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டினார்,

சாட்சியை சட்டத்தரணி அனில் ஒபேசேகர விசாரித்தார்,

சட்டத்தரணி— பல கோரளைகளாக யாப்பாஹுவ தொகுதி பிரிக்கப்பட்டுள்ளதா?

சாட்சி— நான்கு கோரளைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது,

நான் திவிகண்டாஹேறய கோரளைக்கான சுதந்திரக் கட்சி செயலாளர்,

சட்டத்தரணி— இக்கோரளையில் எத்தனை வாக்குச் சாவடிகள் அமைக்கப் பட்டிருந்தன—

சாட்சி— 12 சாவடிகள், இங்கு 14,611 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்,

சட்டத்தரணி— உமது கோரளையின் 33 கட்சிக் கிளைகளில் 1988 டிசமபர் மாதமளவில் எத்தனை ஆதரவாளர்கள் தமமை உறுப்பினர்களாக பதிவு செய்திருந்தனர்?

சாட்சி— ஆயிரத்து 180 பேர்,

சட்டத்தரணி— ஜனாதிபதி தேர்தலில் நீர் முக்கிய பங்கெடுத்திருந்தீரா?

சாட்சி— என் மீது துப்பாக்கிப் பிரயோகம நடைபெற்றதால் என்னால் தேர்தல் பிரசாரத்தை நடத்த முடியாமற் போய் விட்டது—

பிரதிவாதி தரப்பில் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டது—

சட்டத்தரணி— கூட்டம எப்போது நடைபெறுவதாக இருந்தது?

சாட்சி— நவமபர் 19ஆம திகதி, ஆனால் இக் கூட்டம நடைபெறவில்லை, அன்றைய தினம அரசாங்கம ஊரடங்கைப் பிறப்பித்திருந்தது, இதற்கான அறிவித்தல் 18ஆம் திகதி வானொலி மூலம விடுக்கப்பட்டது,

சட்டத்தரணி— அச்சமயம் யாப்பாஹுவையில் குழப்பம நிலவியதா?

சாட்சி— ஆம

சட்டத்தரணி— இதன் பின்னர் தேர்தலுக்கு முன்பாக திருமதி பண்டாரநாயக்கா இங்கு கூட்டமொன்றில் கலந்து கொண்டாரா?

சாட்சி— இல்லை,

[விசாரணை தொடரும]

(ல-032)

# குருநாகலில் ஆடை உற்பத்தி தொழிற்சாலை

வாரியப்பொல, பெப் 27

குருநாகல் மாவட்டத்தில் ஏற்றுமதி கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகள் பல இந்த வருடம ஆரமபிக்கப் படவுள்ளன—

இதற்குத் தேவையான நடவடிக்கைகளை வடமேல் மாகாண சபை மேற்கொண்டு வருகிறது—

இங்கு உற்பத்தி செய்யப்படும ஆடை வகைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும—

இந்தத் திட்டத்தின் கீழ் 3200 இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பினைப் பெறுவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது- [ஐ—138]



கொழும்பு, பெப் 28

கொழும்பு நீதி மாவட்ட சமாதான நீதிவானாக, கொழும்பு 15, அளுத்மாவத்தை வீதியில் வசிக்கும திரு உஸ்வத்தகே லெஸ்லி மோரிஸ் ஜோசப் பெரேரா நியமிக்கப்பட்டிருக்கிறார்,

நீதி அமைச்சரால் இந்த நியமனம வழங்கப்பட்டது,

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் திரு மகேஷ் குணதிலக்கா முன்னிலையில் திரு பெரேரா சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம எடுத்துக் கொண்டார்,

டி லா சால் கல்லூரி, கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் கல்லூரி, வத்தளை புனித அந்தோனியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் கல்லூரி நாட்களில் கிரிக்கட், உதைபந்தாட்டம போன்ற விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொண்டுள்ளார்,

புனித பெனடிக் கல்லூரியில் பயின்ற காலத்தில் கெடற பிரிவின் லான்ஸ் கோப்பரலாகவும விளங்கினார்,

திரு பெரேரா ஒரு சிறந்த சமூக சேவையாளருமாவார்,

(எ)

(பழைய) இதனைத் தெரிவித்தார்—

விழா ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும ஒரு கூட்டம கொழும்பில் நடத்தப்பட்டது—

அக் கூட்டத்தில் நூற்றாண்டு விழா தொடர்பான பல ஆலோசனைகளும பரிமாறப்பட்டன—

(ந—007)

# காணி பகிர்வு

வெலிகாமம், பெப் 27

மாத்தறை மாவட்டத்தில் காணியின்றி இருக்கும 90 ஏழை முஸ்லிம் குடுமபங்களுக்குக் காணிகள் பகிர்ந்து அளிக்கப்பட உள்ளன,

தென் மாகாண சபை இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இருக்கிறது—

வெலிகாமம தொகுதியில் இருக்கும ஹல்லல பிரதேசத்திலேயே முஸ்லிமகளுக்கான காணிகள் வழங்கப்பட உள்ளன,

(ஐ-331)

# இஸ்லாம் சமய பொதுப் பரீட்சை

பாணந்துறை, பெப 27

அகில இலங்கை ரீதியில் அஹதியா மத்திய நிலையம நடத்தவுள்ள இஸ்லாம சமயப் பொதுப் பரீட்சை எதிர்வரும 10ஆம திகதி நடைபெறவுள்ளது—

நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள 19 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள பொதுப் பரீட்சைக்கான பிரவேசப் பத்திரங்கள் தற்போது அனுப்பப் பட்டு வருகின்றன,

(ஐ-248)

53 ஆவது தடவையாக — அடுத்த ஞாயிறு

# கல்கிசைக் கடலில் நீச்சல் போட்டி

## 745 ஆண்களும் 20 பெண்களும் பங்கு

கொழும்பு பெப் 28

எதிர்வரும ஞாயிற்றுக்கிழமை கல்கிசைக் கடலில் இரண்டு மைல் நீள நீச்சல் போட்டி ஒன்று நடத்தப்படும, இப்போட்டியில் இலங்கையின் பிரபல நீச்சல் வீரர்களும வீராங்கனைகளும கலந்து கொள்வார்கள்.

இப்போட்டியில் 745 ஆண்களும் 20 பெண்களும கலந்து கொள்ள முன்வந்துள்ளனர்,

இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற அமபலாங்கொடை இரண்டு மைல் நீச்சல் போட்டியில் ஏழாவது முறையாக வெற்றியீட்டிய வீராங்கனை ஆர் எம தம்மிகா அமபலாங்கொடை நீச்சலில் நான்கு தடவைகள் வெற்றிபெற்ற பிரசன்னா மென்டிஸ் ஆகியோரும ஆண்கள் பிரிவில் பஸார்ன் சிக்குந்தர், ரிப்டி பாமி, ஆர் எம பிரதிப் சந்திரிகா, பெண்கள் பிரிவில் ஆர் என் நிலூக்கா கிருஷாந்தா, உபேக்ஷா சில்வா ஆகியோரும இப்போட்டியில் பங்கு பற்றுவர் என்பதும குறிப்பிடத்தக்கது-

இவ்வாண்டு 53ஆவது தடவையாக இந்நீச்சல் போட்டி கல்கிசைக் கடலில் நடத்தப்படுகிறது-

(எ-032)

## திறமை மூலம் வெற்றி பெற முயல வேண்டும்

—, ஞ்சன் மடுகல்ல

கண்டி பெப் 27

விளையாட்டை பரந்த நோக்குடன் நோக்க வேண்டும, துறையைக் காட்டி அனைத்திலும வெற்றி பெற முயல வேண்டும்,

இவ்வாறு கூறினார் முன்னாள் இலங்கை சர்வதேச கிரிக்கெட் அணியின் காப்டன் திரு ரஞ்சன் மடுகல்ல,

கண்டி திரித்துவக் கல்லூரி கனிஷ்ட பிரிவு மாணவர்களின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மடுகல்ல தொடர்ந்தும பேசுகையில் கூறியதாவது-

ரினிடிக் கல்லூரி பாரமபரிய நடை முறைகளைத் தவற விடாமல் மிகவும உயர் நிலையில் கணிக்கப்படக் கூடியதாக இயங்கி வருவதானது மகிழ்ச்சிக்குரியதாகும், இந்த உயரிய மரபுகளைப் பாதுகாக்க கல்லூரியின் பெற்றோர்கள் ஆற்றி வரும பங்களிப்பு உயர்வானதாகும,

எனது கிரிக்கெட் ஆட்ட வெற்றிக்கும அத்துறையில் ஈடுபாடு கொள்ள என்னை வழிகாட்டிய அனைவரையும நான் இங்கு விருப்புடன் நினைவூட்டுகிறேன்,

இங்கு கல்வி பயிலும மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன், நீங்கள் மாணவர்கள், கல்லூரியின் பாரமபரிய மரபுகளுக்கு மாறாக இயங்காதீர்கள்,

இவ்வாறு அவர் கூறினார்,

மடுகல்ல மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்,

கனிஷ்ட பிரிவு மாணவர் தலைவர் அர்ஜுனா சமரசேகர நன்றி தெரிவித்துப் பேசினார்,

(எ-017)

## இலங்கையும் பங்கு

கொழும்பு பெப் 28

பிரான்சில் இமமுறை நடைபெறும சர்வதேச அங்கவீனர் விளையாட்டுப் போட்டியில் இலங்கையும பங்கு பற்றும்.

ஏழு அங்கவீன விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் பங்கு பற்றுவர்,

ஜூலை மாதம 3ஆம திகதி முதல் 12 ஆம திகதிவரை இப்போட்டிகள் நடைபெறும்,

(எ-007)

# விளையாட்டு பகுதி



## டொமி கெலாட் ஞாபகார்த்த கிண்ணம் பரிசு

பொலீஸ்மா அதிபர் திரு ஹேர்னஸ்ட் பெரேராவுக்கு, "டொமி கெலாட் ஞாபகார்த்த சவால் கிண்ணம" அண்மையில் பரிசாக வழங்கப்பட்டது, திருமதி அமேலியா கெலாட் இதனை வழங்கினார், டொமி கெலாட் உதவி பொலீஸ் மா அதிபராகப் பதவி வகித்துள்ளார், கொழும்பு சென்

பொலீஸ் பிரிவின் சிறந்த சகலதுறை ஆட்டவீரர்களுக்கு வருடந்தோறும இந்தக் கிண்ணம பரிசாக வழங்கப்படும,

பொலீஸ் விளையாட்டு இயக்குநருமான திரு பொலீஸ் எஸ் சிவேந்திரன்

சுட்டிரின்டென்டனும், மத்தியில் காணப்படுகி

## மெய்வல்லுநர் போட்டி

திருகோணமலை, பெப் 27

திருகோணமலை மாவட்ட இளைஞர் சேவை மன்றம குச்சவெளி உதவி ஆணையாளர் பிரதேச இளைஞர் கழகங்களிடையே மெய்வல்லுநர் போட்டி ஒன்றினை நடத்தவிருக்கிறது-

எதிர்வரும இம மாத நடுப்பகுதியில் போட்டியை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது,

போட்டியில் கலந்து கொள்ள விருமபும இளைஞர் கழகங்கள், உதவி இளைஞர் சேவை அதிகாரியோடு தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

(எ-288)

## வெற்றி தோல்வி இன்றி முடிவு

மடவளை பெப் 27

பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி ஒன்றில் திரித்துவக் கல்லூரியும வெஸ்லி கல்லூரியும போட்டியிட்டன,

இப்போட்டி வெற்றி, தோல்வியின்றி முடிவடைந்தது-

கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் கண்டி திரித்துவக் கல்லூரி முதலாம இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 239 ஓட்டங்களைப் பெற்றது- 2 ஆவது இன்னிங்சில் 4 விக்கட் இழப்புக்கு 185 ஓட்டங்களையும பெற்றுக் கொண்டது,

வெஸ்லி கல்லூரி முதாலம இன்னிங்சில் 176 ஓட்டங்களையும இரண்டாம இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 101 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டம இடை நிறுத்தப்பட்டது-

போட்டி வெற்றி தோல்வி

பதவி ... வகித்துள்ளார், கொழும்பு சென் ஜோசப் கல்லூரியில் பயின்ற டொமினிகொலாட் பிரபல கிரிக்கெட் வீராகத் திகழ்ந்தார்,

...நார்,

(எ*ச)

போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது-

(எ-431)

# விமான சேவைகள்

## மார்ச் 1 (வியாழக்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0540 | கராச்சி, பமபாய் | யூ எல் 182 |
| 0625 | சூரிச், சாஜா, மாலைதீவு | பி பி 602 |
| 0700 | குவைத் | யூ எல் 228 |
| 0715 | சிப்போல் பாரிஸ் அபுதாபி | யூ எல் 564 |
| 0740 | பிராங்போர்ட், சூரிச் துபாய் | யூ எல் 548 |
| 0800 | துபாய் | ஈ கே 800 |
| 1005 | வியட்னாம மாலைதீவு | எல் பி 903 |
| 1105 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை | ஐ சி 573 |
| 1150 | சோபியா துபாய் | எல் இசட் 581 |
| 1230 | அமஸ்ரடாம, டுஸல்டுரோப் | எல் ரி 724 |
| 1350 | கராச்சி, மாலைதீவு | பி கே 776 |
| 1500 | திருச்சி | ஐ சி 507 |
| 1515 | மாலைதீவு | யூ எல் 102 |
| 1515 | மொஸ்கோ, துபாய் | எஸ் யூ 545 |
| 1530 | சென்னை | யூ எல் 122 |
| 1800 | திருச்சி | ஐ சி 577 |
| 1950 | நெரிடா, பக்குவொக்கா | யூ எல் 457 |
| 2350 | ஹொங்கொங பாங்கொக் | யூ எல் 423 |
| 1235 | திருவனந்தபுரம | ஐ சி 573 |
| 1415 | அமஸ்ரடாம டுஸெல்டுரோப் | எல் டி 724 |
| 1505 | கராச்சி | பி கே 776 |
| 1540 | திருச்சி | ஐ சி 507 |
| 1715 | துபாய், மாஸ்கோ | எஸ் யூ 545 |
| 1745 | தஹ்ரான் | யூ எல் 261 |
| 1840 | சென்னை | ஐ சி 577 |

### புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| 0725 | மாலைதீவு, சார்ஜா, சூரிச் | பி பி 602 |
| 0815 | திருச்சி | யூ எல் 131 |
| 0845 | பாங்கொக் ஹொங்கொங | யூ எல் 422 |
| 0915 | துபாய் | ஈ கே 800 |
| 1115 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1130 | மாலைதீவு வியன்னா | யூ எல் 132 |
| 1200 | சென்னை | யூ எல் 121 |

## மார்ச் 2 (வெள்ளிக்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0500 | தஹ்ரான் | யூ எல் 262 |
| 0520 | பஹ்ரேன் | ஜி எப் 142 |
| 0530 | குவைத் | கே யூ 361 |
| 0620 | லண்டன், துபாய் | யூ எல் 504 |
| 0745 | ஜெத்தா, ரியாத | எஸ் வி 340 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி 307 |
| 2000 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2100 | மாலைதீவு | யூ எல் 102 |
| 2235 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |

### புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| 0115 | அபுதாபி, பாரிஸ் சிப்போல் | யூ எல் 663 |
| 0130 | துபாய், சோபியா | எல் இசட் 582 |
| 0230 | துபாய் சூரிச், பிராங்போர்ட் | யூ எல் 141 |
| 0635 | பஹ்ரேன் | யூ எல் 547 |
| 0720 | குவைத் | கே யூ 361 |
| 0915 | ரியாத் | எஸ் வி 341 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 1325 | பாங்கொக் | டி ஜி 307 |
| 1730 | மாலைதீவு | யூ எல் 101 |
| 2330 | துபாய், லண்டன் | யூ எல் 503 |
| 2350 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |

குறிப்பு— யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எய லைன்ஸ் ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ் எஸ் வி — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ் டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, டி கே பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218 (விமான நிலையம)

## ஆங்கில வகுப்புகள்

கொழும்பு பெப் 28

கொழுமபு மாளிகாவத்தையிலுள்ள இலஙகை இஸ்லாமிய நிலையம இரண்டாம நிலை மாணவியருக்கு ஆஙகில வகுப்புக்களை நடத்தும.

மூன்ற மாதஙகளுக்கு இப் பாடநெறி நடத்தப்படும.

பிற்பகல் 2-30 மணி முதல் 4-30 மணி வரை இந்த வகுப்புக்கள் நடத்தப்படும.

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஆஙகில பாடத்தில் சித்தி அடைந்தோர் இந்த வகுப்பில் சேரலாம.

இப்படி நிலையப் பணிப்பாளர் அறிவித்திருக்கிறார் (ல-007)

## ஏழைகுடும்பங்கள்: 3000 ஏக்கர் காணி பகிர்வு

ஹெலிகாமம், பெப் 27

தெனியாய தேர்தல் தொகுதியில் காணியற்று இருக்கும ஏழைக் குடுமபஙகளுக்கு மூவாயிரம ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட உள்ளது-

அரசு இதற்கான சகல நடவடிக்கைகளையும மேற்கொண்டு வருகிறது-

அரசாஙகம மொறவக்க கலகவத்த என்னும தோட்டத்தில் இருந்த 53 ஏக்கர் காணியையும கந்தில்பான தோட்டத்தில் இருந்த 300 ஏக்கர் காணியையும போறாபிடிய தோட்டத்தில் இருந்து 73 ஏக்கர் காணியையும பொல்ஹேன வரகல தோட்டத்தில் இருந்து 63 ஏக்கர் காணியையும மில்லவ தோட்டத்தில் இருந்து 63 ஏக்கர் காணியையும தென்பிட தோட்டத்திலிருந்து 263 ஏக்கர் காணியையும சுவீகரித்து ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது-

ஏனைய 2185 ஏக்கர் காணியை சுவீகரித்து பகிர்ந்தளிப்பதற்கும அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது- [ஐ—331]

# வானொலி

## 1—3—1990

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை — பார்த்தசாரதி சுப்ரபாதம
5-30 சாயிபஜன்
5-45 சைவ நற்சிந்தனை
5-50 இஸ்லாமிய நற்சிந்தனை
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம — அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தகசேவை நிகழ்ச்சி
8-00 லயவிந்யாசம
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 சுவாரா மலாயூ மலராய் மஞ்சரி
9-00 வர்த்தக சேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 தவில்கச்சேரி
10-45 பக்திப்பாடல்கள்
11-00 வயலின்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 இந்துசமயப் பேச்சு
6-30 வளரும பயிர்
6-45 பாவளம
7-00 கிராமசஞ்சிகை
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு —
8-00 முஸ்லிம நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 கலந்துரையாடல் "கலைகலைக்காகவா"
10-00 இசைக்கச்சேரி
11-00 ஒலிபரப்பு முடிவு

## 2—3—1990

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 திருமுறைப் பாடல்கள் கலாராணி பரசாமி
5-30 பாமாலை திருத்தாண்டகம தன லக்ஷ்மி கணநாதலிஙகம
5-45 சைவநற்சிந்தனை
5-55 இஸ்லாமய நற்சிந்னை
5-55 போதிராதவனின் போதனைகள
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம அறிவிப்புகள்
7-00 வர்த்தக சேவை
7-30 பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வாத்திய விருந்து
8-15 மெல்லிசைப் பாடல்கள்
8-30 உறுத மஞ்சரி
9-00 வர்த்தக சேவை

பகல் —
10-00 இசையமுதம
10-30 பகதி மஞ்சரி
11-00 நாதஸ்வரம நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன்
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை

மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 திருவாசகம பொன் சுந்தரலிஙகம
6-45 திதிப் பாடல் பயிற்சி என் நவரட்ணம
7-00 களத்துமேடு கேள்வி பதில்
7-15 விவசாய நாடகம வயலோடு வசந்தஙகள்
7-30 மெல்லிசைப் பாடல்கள்
7-50 உலகச் செய்திகள்

இரவு
8-00 முஸ்லிம நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் மல்லாகம விஸ்வநாதன் கு சி குலரத்தினம
9-45 கதாப்பிரசஙகம நிகழ்த்துபவர் எஸ் வடிவேலு
10-30 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு

# டெலிவிஷன்

## 1—3—1990

### ரூபவாஹினி

4-30 கல்வி நிகழ்ச்சி - தமிழ்
5-00 செய்திகள் - சிஙகளம
5-30 முத்துஹர குறுக்கெழுத்து நிகழ்ச்சி
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-10 ஜெர்மன் வகுப்பு
6-30 செய்திகள் - தமிழ்
6-55 வளரும உலகமும
7-25 சார்க் நிகழ்ச்சி
8-00 செய்திகள் - சிஙகளம
8-30 லைப் ஆன் ஹேர்த்
9-30 செய்திகள் - ஆஙகிலம
10-00 மேஸ் லாஸ்ட் ஸ்டார் பரேட்
10-30 செலிபிரிட்டி
11-20 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்.

6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 மெடிசினல் டிரக்ஸ்
6-30 செய்திகள் - சிஙகளம
7-00 கலாரசாஙக
7-30 பிரைட் அன்ட் பிறிவி
8-00 டீக்யூக்ஸ் ஆப் ஹசாட்
9-00 தச தெசின்
9-30 ஸ்ட்ரீட் லீகல்
10-00 செய்திகள் - ஆஙகிலம
10-26 ஸ்ட்ரீட் லீகல் தொடர்ச்சி

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# தமிழர் வாழ்வு, நாட்டு வளம்

## இரண்டிலும் தொண்டா பெரும் பங்கு

### நூல் வெளியீட்டு விழாவில் இந்திய தூதுவர்

கொழும்பு பெப் 28

திரு தொண்டமான் ஒரு சாத்வீக போராட்ட வீரர். இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களின் பெருந்தலைவர். ஒரு புறம தமிழர்களின் அரசியல் வாழ்விலும், மறு புறம இந்த நாட்டின் வளத்திலும அவர் பெரும பங்களிப்பைச் செய்துள்ளார்.

"மகாத்மா காந்தி இன்று உயிருடன் இருந்தால் திரு தொண்டமானின் முன்மாதிரியை பெரிதும பாராட்டி பெருமைப்பட்டிருப்பார்."

இந்தியத் தூதுவர் திரு லால் மெஹ்ரோத்ரா இப்படி கூறினார்.

கடந்த திங்கள் இரவு கொழும்பு ஹோட்டல் ஒபரோயில் "அடிமைத்தளையில் இருந்த விடுதலை" என்ற திரு தொண்டமானின் அரசியல் வரலாற்று நூல் வெளியிடப்பட்டது.

இலங்கை — இந்திய சமுதாய பேரவையால் இந்நூல் வெளியிடப்பட்டது. திரு தொண்டமானின் ஐமபது ஆண்டு சேவையைப் பாராட்டும முகமாகவே இவ் விழா நடத்தப்பட்டது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய திரு மெஹ்ரோத்ரா, திரு தொண்டமானின் தன்னலமற்ற அரசியல் வாழ்க்கையை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது—

திரு தொண்டமான் 1946 இல் தமது தோட்டம ஒன்றை ஈடு வைத்து தொழிலாளர்களை சிறை செல்லவிடாது பாதுகாத்தவர்.

தியாகத்துக்கு அப்பால் ஒரு தலைவனுக்கு இருக்க வேண்டியது துணிச்சல். திரு தொண்டமானிடம அது நிறையவே இருந்தது. 1984இல் திரு தொண்டமான் தமது அரசுக்கு எதிராகவே வேலை நிறுத்தம ஒன்றை மேற்கொண்டார்.

மிகவும துணிச்சல் மிக்க ஒரு மனிதராலேயே இதனைச் செய்ய முடியும.

1985இல் இந்த நாடு மிக மோசமான வன்செயல்களையும, கலவரங்களையும எதிர் நோக்கிய போது, திரு தொண்டமான் அரசியல் சாதுரியமாக பிரார்த்தனை இயக்கத்தை ஆரமபித்தார்.

திரு தொண்டமான் ஒரு முனிவர்; ஒரு சாது. எனவே அவரை மாமுனிவர் என அழைப்பதில் உரிமை கொண்டுள்ளேன்.

இப்படி திரு மெஹ்ரோத்ரா திரு தொண்டமானுக்குப் புகழாரம சூட்டினார்.

அமைச்சர் திரு தொண்டமானிடம நூலை கையளித்து விட்டு, உரையாற்றிய பிரிட்டிஷ் தூதுவர் திரு டேவிட் கிளஸ்டன் பேசியதாவது—

திரு தொண்டமான் துணிச்சல் மிக்கவர். எல்லா நாட்டு அரசியல் தலைவர்களுக்கும எல்லா காலங்களிலும தேவைப்படுவது இத்துணிச்சலே. இந்த முக்கிய அமசத்தை இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும காணக் கூடியதாக இருக்கிறது.

கடந்த ஐமபது ஆண்டுகளாக சோதனையான காலகட்டங்களில் மக்களை வழிநடத்திச் செல்ல இப்படிப்பட்ட ஒரு தலைவர் கிடைத்ததற்கு இலங்கை கொடுத்து வைத்திருக்க வேண்டும.

இந்நூலின் தலைமகன் தனது ஆரமப வாழ்வை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழேயே ஆரமபித்தார். இப்படிப்பட்டவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும நூல் வெளியீட்டு விழாவுக்கு இந்நாட்டின் முன்னாள் காலனித்துவ ஆட்சியாளர்களின் பிரதிநிதியான என்னை அழைத்தது குறித்து மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்.

நான் பிரிட்டிஷ் பிரஜையும இந்நாட்டு நண்பனும மட்டுமல்ல. ஏனெனில் இந்நாட்டின் பிறந்து வளர்ந்த வங்காளர்கிலேயே நானும் பிறந்து வளர்ந்தேன்.

இங்கிலாந்தும பிரான்ஸும ஆங்கிலக் கால்வாயூடாக பிரிக்கப்பட்டிருப்பதைப் போலவே இலங்கையும இந்தியாவும பாக்குநீரிணையால் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனாலும இவ்விரு நாடுகளிடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றன. இங்கிலாந்து — பிரான்ஸ் நாடுகளிடையே நடைபெற்றதைப் போலவே இவ்விரு நாடுகளும ஒன்றை ஒன்று பகைத்துள்ளன. நேசம பாராட்டியுள்ளன. கல்வி, கலாசார பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன. இரு நாட்டு மக்களும தமமிடையே திருமணம செய்து கொண்டுள்ளனர். அதே சமயம குடிபெயர்ந்தும உள்ளனர்.

ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்தால் அதன் முதல் பகுதியையும, இறுதிப் பகுதியையும மட்டுமே தான் படிப்பது வழக்கம என்றும இதன் மூலம் நடுவில் இருப்பதைத் தன்னால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும திரு தொண்டமான் ஒரு தடவை கூறியிருந்தார்.

நானும்கூட அப்படித்தான். ஆனால் இந்நூலைப் பொறுத்தவரை நடுப் பகுதியையும [illegible] வாசிக்க வேண்டியிரு[illegible] ஏனெனில் முதல் மற்றும கடை[illegible] பகுதியை என்னால் நடுப்பகுதியி[illegible] இருந்து பிரிக்க முடியாமல் போய் விட்டது. ஒவ்வொரு பகுதியும

# சகல பாடசாலைகளிலும்

## தமிழ், சிங்களம் போதனை

கொழும்பு பெப் 28

நாட்டின் சகல பாடசாலைகளிலும 3ஆம வருடம முதல் 6ஆம வருடம வரை கல்வி பயிலும சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியும, தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழியும போதிக்கப் படும.

கல்வி, கலாசார, தகவல் துறை அமைச்சு இதற்கான முடிவை எடுத்திருக்கிறது.

இது தொடர்பாக ஒவ்வொரு பாடசாலைகளுக்கும தேவையான புத்தகங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளர் கேணல் வி எஸ் குடலிகம மஹரகமையிலுள்ள தேசிய கல்வி நிறுவனத்துக்கு உத்தரவிட்டிருக்கிறார்.

இதே வேளை, சகல பாடசாலைகளுக்கும சிங்கள, தமிழ் ஆசிரியர்களை நியமிப்பதற்கும முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (ல—வ)

# ஐக்கிய இலங்கை எனில் தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சி; இல்லையேல் சுதந்திர ஈழமே முடிவு

## கருணாநிதிக்கு சமர்ப்பித்த

### 19 நிபந்தனைகள் அடங்கிய அறிக்கையில் ஈ. பி. ஆர். எல். எப். விளக்கம்

கொழும்பு பெப் 28

ஐக்கிய இலங்கை என்றால் தமிழ் பேசும மக்களுக்கு சுயாட்சி, அது இல்லையென்றால் சுதந்திர ஈழமே முடிவாகும, இதுவே எமது அரசியல் நிலைப்பாடு.

இலங்கை தமிழ் குழுக்களுடன் பேச்சு வார்த்தை நடத்திவரும தமிழக முதலமைச்சர் திரு மு கருணாநிதி அந்த பேச்சு வார்த்தைகளின் போது ஆராய்வதற்கென ஈ பி ஆர் எல் எப் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகார பரவலாக்கல் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும என்பதை விளக்கி 19 நிபந்தனைகளை அந்த இயக்கம அறிக்கை மூலம சமர்ப்பித்[illegible] ரங்களுடனும வாழக் கூடிய வகையில் அரசியல் தீர்வொன்று உருவாக்கப்பட்டு இந்தப் பேச்சு வார்த்தைகளின் போது நிறைவேற்றப்பட வேண்டும,

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மாகாண சபையை கலைத்து புதிய தேர்தல் மூலம தமது கட்சிக்கு புதிதாக ஆசனங்களை பிடிக்கவும,

தமிழர்களுக்கான ஆசனங்களை குறைக்கவும,

முஸ்லிம மக்களின் உரிமைக் குரலான முஸ்லிம காங்கிரஸின் ஆசனங்களைக் குறைக்கவும,

இந்தக் குழப்பத்தில் அதிகார பரவலாக்கல் என்ற விடயத்தில் இருந்து தமிழர்களின் கவனத்தை திசை திருப்பவும்,

இறுதியில் தமிழர்களிடையே

(அ) 1977க்குப் பின்னரலான வற்றைக் கலைத்தல்

(ஆ) அதற்கு முன்னையவை
சிங்கள மாகாணங்களுடன் இணைத்து அதற்கு ஈடாக காட்டு நிலங்களை வடக்கு கிழக்கோடு இணைத்தல்

(இ) வவுனியா திருமலை
புனானை ரயில் பாதையை எமது மாகாணத்தில் அமையும் வகையில் மாகாண எல்லை வகுத்தல்

5 1993க்கு முன் இன விகிதாசாரப்படி இராணுவம

6 1990க்குள் இன விகிதாசாரப் பொலீஸ்

7 பலாலி காரைநகர் தள்ளாடி வவுனியா திருமலை அம பாறை ஆகிய இடங்களில் மட்டுமே முப்படை முகாமகள்—

கல்வி தொழில் சமூக உரிமைகள்

14 சட்டங்களுக்கு முரண்படாத மாகாண அரசு வெளிநாட்டு உதவி பெறுதல்

15 மாகாண அரசின் பொருளாதார பிரசார நிறுவனங்கள்—

16 எஞ்சிய விடயங்கள் தொடர்பான சட்ட அமைப்பு அதிகாரம

17 சகல வெளிநாட்டு உளவு படைகளையும வெளியேற்றல்

18 அதிரடிப் படை மாகாணத்திற்கு வரக் கூடாது—

19 பயங்கரவாத தடைச் சட்டம் அவசரகாலச் சட்டம ஆகியவற்றை நீக்குதல்

இவை நிறைவேற்றப்படும போது ஈ பி ஆர் எல் எப் 1991 மார்ச் மாதத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்த இணங்கும—

தற்போதைய மாகாண சபையின் தமிழ் ஆசனங்கள் அனைத்தை வேண்டுமானாலும புலிகளுக்கு வழங்கும— ஆசன பகிர்வை தமிழக முதல்வர் செய்யட்டும—

தமிழ்க் கட்சிகளிடையே அமைதிக்கும சகஜ வாழ்வுக்கும ஒத்துழைப்பு வழங்கும

## மஹஜன சம்பத சுவீப் முடிவுகள்

கொழும்பு பெப் 28

நேற்று முன்தினம இழுக்கப்பட்ட மஹஜன சமபத 285ஆம இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு—

வெற்றி பெறும எண்

**344880**

முதலாம பரிசு
ரூ 5 லட்சம
(எல்லா 6 இலக்கங்களும சரியாக இருந்தால்)

4 இரண்டாம பரிசுகள்
தலா ரூ 50 ஆயிரம வீதம
(இறுதி 5 இலக்கங்களும சரியாக இருப்பின்)

28 மூன்றாம பரிசுகள்
தலா ரூ 5 ஆயிரம வீதம
(இறுதி 4 இலக்கங்களும சரியாக இருப்பின்)

321 நான்காம பரிசுகள்
தலா ரூ ஆயிரம வீதம
(இறுதி 3 இலக்கங்களும சரியாக இருப்பின்)

3199 ஐந்தாம பரிசுகள்
தலா ரூ 100 வீதம
(இறுதி 2 இலக்கங்களும சரியாக இருப்பின்)

## வடக்கு கிழக்கு மா. ச. கூட்டம்

திருகோணமலை பெப் 27

சபையின் தலைவர் திரு

அதிகார பரவலாக்கல் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை விளக்கி 19 நிபந்தனைகளை அந்த இயக்கம் அறிக்கை மூலம் சமர்ப்பித்துள்ளது,

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது—

மலையக தமிழர்களுக்கும், கிழக்கு முஸ்லிம்களுக்கும் தனி மாகாண சபைகள் அமைக்கப்பட்டு, நிரந்தரமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு இந்திய மாநிலங்களைப் போல் பூரணமாக அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்,

இல்லா விட்டால் சுதந்திர ஜனநாயக தமிழ் ஈழக் குடியரசை அங்கீகரித்து அதனை அமைத்து பாதுகாக்க இந்தியா சகல உதவிகளையும் வழங்க வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் வடக்கு, கிழக்கு மாகாண அரசை அமைத்து வளர்ப்பதற்காக ஈ பி ஆர் எல் எப் இயக்கம் 600க்கு மேற்பட்ட தமது முன்னணி உறுப்பினர்களை தியாகம் செய்துள்ளது,

இதேவேளை அதிகார பரவலாக்கலை உரிய முறையில் மேற்கொள்ளாமல் தமிழரைக் கொண்டே தமிழரை அழிப்பதில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

புலிகள் இயக்கமும், அதன் ஒரு பகுதியான ஈழம் புரட்சி அமைப்பும (ஈரோஸ்) தமிழ் மக்களுக்கு செய்துள்ள துரோகங்களையும், இராணுவ நாசகார செயல்களையும் கவனத்தில் கொள்ளா திருக்க முடியாது,

ஆகவே தமிழ் மக்கள் சுதந்திரமாகவும சுயாட்சி அதிகா

இந்தக் குழப்பத்தில் அதிகார பரவலாக்கல் என்ற விடயத்தில் இருந்த தமிழர்களின் கவனத்தை திசை திருப்பவும்,

இறுதியில் தமிழர்களிடையே இரத்தக் களரியை தோற்றுவித்து அவர்களின் ஆற்றலை இழக்கச் செய்யவும் பின்னர் அனைத்திற்கும தமிழ் இயக்கங்களையும தமிழ் நாட்டையும குறைகூறவும திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது,

இந்த நிலையில் தமிழர்கள் கௌரவமாக வாழ்வதற்கான எமது நிபந்தனைகளை இங்கு சமர்ப்பிக்கின்றோம்- இதற்கு சம்பந்தப்பட்ட சகலரினதும ஒத்துழைப்பைக் கோருகிறோம்—

### எமது பிரேரணைகள்

* மாகாண அரசுக்கான அதிகாரம, பாதுகாப்பு சம்பந்தமான திட்டம தொடர்பாக பேச்சு வார்த்தையின் போது இணங்குதல்.
* தமிழக முதல்வரும, இந்திய பிரதமரும அதனை அங்கீகரித்தல்,
* அதற்கு காலக்கெடு விதித்தல்,
* அதனை நிறைவேற்ற திட்ட அமுலாக்கல் மேற்பார்வைக் குழு நியமித்தல்,
* திட்டத்தை இலங்கை ஏற்கா விட்டால் இந்தியா தமிழீழத்தை ஏற்றல்,

### அதிகார பரவலாக்கல்

1 இந்திய மாநிலத்திற்கு போல் அதிகாரம,

2 வடக்கு, கிழக்கு நிரந்தர இணைப்பு,

3 அரச நிலங்களின் பூரண நிர்வாகம

4 வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களில் —

சாரப் பொலீஸ்

7 பலாலி காரைநகர் தள்ளாடி வவுனியா திருமலை அம்பாறை ஆகிய இடங்களில் மட்டுமே முப்படை முகாமகள்—

8 நிரந்தர குடியிருப்பாளர்களுக்கு மட்டுமே வாக்குரிமை

9 நாடாளுமன்றத்திற்கு நிகராக இன விகிதாசாரப்படி இரண்டாவது சபை

10 திருமலை யாழ் ஊர்காவற்றுறை கோட்டை பகுதிகளில் படையினர் நீக்கப்படல்— அவை மாகாண அரும்பொருட் காட்சிசாலைகளாக்குதல்

11 மாகாண அரசுக்கு ஆலய நிர்வாக அதிகாரம

12 மறுவாழ்வுக்காக வெளிநாட்டு உதவி உட்பட 2500 கோடி ரூபா

13 மலையகத் தமிழர் பெரும்பான்மை மாகாண சபை கிழக்கே முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபை

இரண்டுக்கும் நிலம் பொருளாதாரம அரசியல் கலாசார

களுக்கு வழங்கும்— ஆசன பகிர்வை தமிழக முதல்வர் செய்யட்டும—

தமிழ்க் கட்சிகளிடையே அமைதிக்கும சகஜ வாழ்வுக்கும ஒத்துழைப்பு வழங்கும

எந்த ஒரு தமிழ்ப்பேசும மகனுக்கு எதிராகவும எந்த ஒரு கட்சியும் நடந்து கொள்ளக் கூடாது—

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் போது தமிழர்களுக்கும முஸ்லிம்களுக்கும இந்தியா அரசியல் புகலிடம வழங்க வேண்டும—

இவ்வாறு நடவடிக்கை எடுக்காத மாகாண சபையைக் கலைத்து புதிதாகத் தேர்தல் நடத்த நாம் இணங்குவது எமது கையைக் கொண்டே தமிழ் பேசும் மக்களின் தலையில் மண்ணை வாரிப் போடுவதற்கு இலங்கை அரசுக்குத் துணை போவதாகும—

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது— (ல—ற)

## தமிழுக்கு 3ஆம் இடம்

### மா. சபை உறுப்பினர் ஆட்சேபம்

கொழும்பு பெப் 28

சப்ரகமுவ மாகாண சபை நிகழ்ச்சிகளில் தமிழ் மொழி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டிருப்பது வேதனைக்குரிய ஒரு விடயம என சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் திரு ஏ எம டி இராஜன் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

அண்மையில் சப்ரகமுவ மாகாண சபையில் நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரை முதலாவதாக சிங்களத்திலும, இரண்டாவதாக ஆங்கிலத்திலும, மூன்றாவதாகவே தமிழிலும அச்சிடப்பட்டுள்ளன.

இது ஜனாதிபதியின் கொள்கைக்கு முற்றிலும முரணான ஒன்றாகும.

தமிழ் மொழியும அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டிருக்கும இடம தமிழ் மொழிக்கும வழங்கப்பட வேண்டும.

சப்ரகமுவ மாகாண சபையில் தமிழ் பேசும உறுப்பினர்கள் ஐந்து பேர் இருக்கின்றனர். அவர்களுடைய வசதியையாவது கருத்தில் கொள்ள வேண்டும.

ஆளுநரின் உரை தமிழ் மொழியில் அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் அது தமிழ் மொழிதானா என்றே புரியாமல் இருக்கின்றது. தமிழ் மொழி அங்கு சிரமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும என திரு இராஜன் கோரிக்கை விடுத்துள்ளார். (ல-ய)

## வடக்கு கிழக்கு மா. ச. கூட்டம்

திருகோணமலை பெப் 27

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம இன்று மார்ச் முதலாம திகதி நடைபெறும.

சபையின் தலைவர் திரு பொன் இராம இராஜகாரியர் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

கூட்டம காலை பத்து மணிக்கு ஆரமபமாகும (ல-ங-288)

அரசியல் தலைவர்களுக்கும எல்லா காலங்களிலும தேவைப்படுவது இத்துணிச்சலே. இந்த

வாசிக்க வேண்டியிரு... ஏனெனில் முதல் மற்றும கடை பகுதியை என்னால் நடுப்பகுதியிலிருந்து பிரிக்க முடியாமல் போய் விட்டது. ஒவ்வொரு பகுதியும அவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன.

இப்படி பிரிட்டிஷ் தூதுவர் தெரிவித்தார்.

(ல-ங-455-032)


இதோ வெளிவந்துவிட்டது

குணசேனா

ஆங்கில—தமிழ்

சுருக்க அகராதி

ஆக்கியோன் - எஸ் நடராசா

விலை ரூ. 190.00

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி

உங்கள் தேவைக்கு உடனே

எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்



எம். டி. குணசேன

அன்ட். கம். லிமிட்.

217- ஒல்கொட் மாவத்தை

கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபெண்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல 1612 வெளியீட்டு திகதி 1 மார்ச் 1990-

DINAPATHI. Gunasena Mawatha, Colombo 12 —

P.O. Box 1613